கருணாநிதி கருணை முன்னிற்க

நமது ஞானபூபதிகள் சேகரித்த

# சருவமத சிவகாருணியம்.

OFFICE OF THE REGISTRAR
12 MAY 1930
MADRAS

வெளியிட்டவர்கள்:

எம். ஏ. நாவலர் அண்டு சன்ஸ்,

திருவாரூர்

1930 [விலை அணா 6.

Q:4
N30
225265

இவ்விரண்டாம் பதிப்பிற் கூறியுள்ள...
48 நாள் அப்பியாசித்தால் ஞானோதயமாகிவ...

விலைமதிக்கமுடியாத மாணிக்கமாகிய

# ஞானக்களஞ்சியம்.

ஏராளமான அப்பியாசப்படங்களுடன் கூடிய

(விளக்கமான இரண்டாம் பதிப்பு).

இதற்குமுன் ஞானக் களஞ்சியத்தை வாசித்தவர்களெல்லாம் இவ்விரண்டாம் பதிப்பை வாசிக்க வேண்டியது அத்தியாவசியம். ஏன் ?

ஒருவன் ஒன்றை முதல்தடவை செய்ததைவிட மறு தடவைசெய்தது அழகாகவும், திருத்தமாகவும் அமைந்திருக்குமல்லவா? அதுபோல், முதற்பதிப்பின் அனேக விஷயங்களை மணி மணியாகத் திருத்தியும், விளக்கியும், விட்டுப்போன அனேக உபதேசங்களையும், ஞானப் புதையல்களையும், இப்பதிப்பில் அற்புதம்! ஆனந்தம்! என்று கண்களில் ஒத்திக்கொள்ளும்படியாக எழுதியும், புதிது புதிதான சில படங்களை அமைத்தும் வெளியிட்டுள்ளனம். புதிதாகச்சேர்த்த ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு கோடி பொன்கொடுத்து வாங்கினுல் தானென்ன! என்று மகிழ்கிறுர்கள். இந்நூலின் மகிமையை உத்தேசித்தே சிலர் நம்மிடம் அநுமதிகேட்டு ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் முதலான பல பாஷைகளில் அச்சிட விரும்புகிறுர்கள். சிலர் ரூபாய் 3000, 4000, தருகிறேம்! இந்நூலின் உரிமையை எங்களுக்குக் கொடுத்து விடுகிறீர்களா? என்று கேட்கிறுர்கள் என்றுல், இந்நூலின் பெருமையை எவ்வாறு அளவிட முடியும்? குருவில்லாமலே இந்நூலைப்படித்து அனேகர் நல்ல நிலைமைக்கு வந்து விட்டார்கள்.

சிறுவர்களும், சிறுமிகளும், வாசித்துணருமாறு இனிய செந்தமிழ் வசன நடையில் எழுதப்பெற்றுள்ள விரிவான இந்த இரண்டாம் பதிப்பிற்கும் பழையவிலையே ரூ. 3.

கருணையானந்த ஞானபூபதிகள் எழுதிய

அன்பிற்கு அத்திவாரயாகிய

# சர்வமத சீவகாருணியம்.

---

விருத்தம்.

பூவினிற் சனனம் போந்த புழுமுத னரீ ரான
சீவகா ருணிய மொன்றே சென்ம சாபல்ய நல்கும்
தேவரா னுலுங் கோற நின்றலாற் றுயர நண்ணிப்
பாவமே பெறுவ ரென்னும் பண்பெலாம் விளக்கு வாமால்.

கல்லுறழ் மனத்தீர் கேண்மோ! கடவுளே நேரில் வந்து
கொல்லுத லாலே பாவ மிலையெனக் கூறி னுலும்
சொல்லிய அவர்தம் மாற்றந் துரும்பென மதிப்ப தன்றி
நல்லதென் றெவர்தான் கொள்வார் நாமுமங் ஙனஞ்செய் வாமால்.

கடவுளை அடையும் மார்க்கங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான சகலநெறிகளும் ஓர் உடலைப்போலவும், அவ்வுடலுக்கு "அன்பு" என்பது உயிரைப்போலவு மிருக்கிறது. உயிரில்லாத வுடல் பிணம் என்று சொல்லப்படுவதுபோல் அன்பில்லாத மார்க்கங்களும் அங்ஙனமே மதிக்கப்படுகிறது. ஆகையால் சகல மார்க்கங்களும் அன்பு ஒன்றையே பிரதானமாகக்கொண்டுளது. அது பற்றியே "அன்பின் வழிய துயிர் நிலை"என்றனர் ஆன்றோர். அத்தகைய அன்பு பிரகாசிப்பதற்கு சீவகாருணியமானது ஒரு உயரிய அஸ்திவாரமாகத் திகழ்கின்றது. சீவகாருணிய

மில்லாதவர்கட்கு அன்பு பிரகாசிப்பதில்லை. ஒருவாறு பிரகாசிப்பினும் அது ஏகதேசமேயன்றிப் பூரணமாய்ப் பிரகாசித்ததன்று. ஆனால் சீவகாருணியம்! சீவகாருணியம்!! என்று சிலர் ஒரு பாடமாகச் சொல்லிக்கொள்கிறார்களேயன்றி, சீவகாருணியம் என்பது புலாலைத் தின்னுமலிருப்பது மட்டுமல்ல. ஆடு மாடு, கோழி, எறும்பீருகவுள்ள சகல சீவன்களையும் தன்னுயிரைப்போல் வாஸ்தவத்தில் எண்ணி, அவ்வுயிர்களை வருத்தாமலிருப்பதும், தம்மாலியன்ற வுதவியைப் புரிவதுமே சீவகாருணியமாகும். சிலர், மாமிசாதிகளைத் தின்னுமலிருப்பதே சீவகாருணியமெனக் கருதி, சில சமயங்களில் ஆடு மாடுகள் தன்னுடைய பயிர், கொடி, செடிகளையும், இதர பொருட்களையுந் தின்னக் கண்டால் அவைகளைத் துரத்திவிடாமலும் இராஜ ஆக்ஞைப்படி வாடியிற் கொண்டுபோய் அடைக்காமலும், கோபாவேசத்துடன் தன் கையிலிருந்த மண்வெட்டியோ! அரிவாளோ! தடிக் கொம்போ! மற்றெதுவாயிருந்தாலும் அதைக்கொண்டு அம் மிருகத்தின் உயிர் நீங்கும் விதமாய் நையப் புடைக்கின்றார்கள். இத்தன்மை உடையவர்கள் மாமிசத்தைச் சாப்பிடாமல் தமது முன்னோர்கள் கொண்டிருந்த வழக்கத்தைக் கைக்கொண்டு, அந்த மாமிசத்தின் சுவை இவ்வாறிருக்குமென அறியாமலிருக்கிறார்களேயன்றி, உண்மையில் மாமிசத்தைப் புசிக்கக் கூடாதென்று எண்ணி நீக்கியவர்களல்லர்.

சகல சீவராசிகளையும் தன் உயிர்போல் எண்ணி இரட்சிப்பதே சீவகாருணியம். ஒரு பிராணியைக் கொல்வதும், அதைப் புசிப்பதும் பாவமல்லவென்று எந்த மதமும் கூறியிராது. அப்படிக் கூறியிருப்பினும் நாளாவட்டத்தில் சிறிது சிறிதாகக் குறைந்துவிடவேண்டுமென்று சமய சாந்தியாகக் கூறியிருக்குமேயன்றி உண்மையாகக் கூறியிராது. அப்படி உண்மையாகக் கூறியிருந்தால் அது தவறுதலேயாகும். ஆடு, கோழிகள் கொன்று தின்பதற்கே ஏற்பட்டது; மற்றப்பிராணிகளைக் கொல்வதுதான் பாவம் என்று சில சுயநலப் புலிகள் கூறுவதும் சீவகாரு[illegible]து.

யாகம் செய்வதற்காக ஆடுகளைக்கொன்று பார்ப்பனர்கள் புசிப்பது புண்ணியமெனவும், அதே ஆட்டை இஸ்லாமியர்கள் கொன்றால் பாவமெனவும் சில இந்துக்கள் கருதுகிறார்கள். இஸ்லாமியர்களோ பசுமுதலான அசைபோடும் சாதுவான பிராணிகளை தக்பீர் என்னும் வேத மந்திரம்சொல்லி அறுத்துப் புசிப்பது புண்ணியமென்றும், இந்துக்களைப்போல் கதறக் கதறக் கழுத்தை முறிப்பதும், வெட்டுவதுமே பாவம் என்றும் கருதுகிறார்கள்.

யாகம் செய்வதன் மூலமாய் ஆடுகளைக் கொன்று அவற்றின் சீவனை நற்பதவிக்கு அனுப்புவதாக ஆரியர்கள் கருதுகிறார்கள். ஆனால் இவர்கள் சில ஆடுகளின் சீவனைத்தானே உயரிய பதவிக்கு அனுப்புவதாகக் கருதுகிறார்கள், இவர்களுடைய முன்னோர்களாகிய இராமர் என்றவர் இராவணன், வாலியாதி சைனியங்களை அழித்து நற்பதவிக்கு அனுப்பியதாக ஒப்புக்கொண்டிருப்பதைப் போலவும், பாரத யுத்தத்தில் அருச்சுனன் தமது பந்துக்களையும், ஆச்சாரியர்களையுங் கொல்லமாட்டேன் என்று கூற, கிருஷ்ணன் கீதையின் மூலமாக தூல சூக்கும உணர்ச்சிகளைப் போதித்து அவர்களைச் சங்கரிக்கச்செய்து அவர்கள் ஆன்மாக்களை உயர்பதவி அடையச் செய்தார் என்று கருதுவதைப்போலவும் நாங்கள் ஏன்! பல்லாயிரங்கோடி ஆடு, மாடு, கோழி, கொக்கு, குருவி முதலானவைகளை வேத மந்திரம் சொல்லிப் புசித்து அவைகளின் ஆன்மாக்களை நற்பதவி அடையச்செய்வது கூடாது என்று இஸ்லாமியர் கருதுகிறார்கள். இந்துக்கள் தங்கள் காளி, கருப்பன் என்னும் சாமிபேரால் இன்றளவும் ஆடு மாடு வெட்டிப் பலி கொடுப்பது புண்ணியம் என்று கருதுகிறார்கள். இஸ்லாமியர்களும் குர்பானி கொடுப்பது புண்ணியம் என்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் தாங்கள்மாத்திரம் செய்வது புண்ணியம் என்றும், மற்றவர்கள் செய்வது பாவமென்றும் சுயநலமாகக் கருதுகிறார்கள். இவர்கள் எந்தக் கடவுளின்பேரால் எந்த எண்ணத்தோடு பிராணிகளைக் கொன்றாலும் அது முற்றிலும் தவறுதலான காரியமேயாம். ஆனால்

இவர்கள் கடவுள் பிரீதிக்காக இபுருகிம் நபி அவர்கள் தன் பிள்ளையைக் குர்பானி (பலி) கொடுக்க எத்தனித்ததுபோல வும், சிறுத்தொண்டர் தன் பிள்ளையைக் கறி சமைத்துக் கொடுத்த சரிதப்போலவும் தத்தம் பிள்ளைகளை அவ்வாறு பலிகொடுக்க எத்தனிப்பார்களா? ஒரு காலமும் எத்தனிக்க மாட்டார்கள். அப்படிச் செய்ய இவர்களுக்கு மனம் வரு மானல் இவர்கள் கடவுளிடத்தில் அதிகமான பிரீதியுள்ள வர்கள்தான். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளை யாருக்கு உடைப்பதில் என்ன பயன்? இவர்கள், தாம் செய் யும் அநீதியை ஒப்புக்கொண்டு மற்றவர் செய்யும் அநீதியைப் போக்க முயற்சி செய்கிறதில்லை. இப்படி அவரவர் செய்யும் காரியமே சாலச் சிறந்ததென்று போட்டாபோட்டி செய்து நடப்பதால்அநியாயமாய் கேட்பாரற்ற ஏழைப் பிராணிகளை ஏராளமாகக் கொல்லப்படுகின்றன. ஐயோ! பாவம்! என் செய்வோம்.

## தாயுமானவர்.

(1) கொல்லா விரதம் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுமதென் இச்சை பராபரமே.

(2) கொல்லா விரதமொன்று கொண்டாரே நல்லார்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

சீவகாருணியமுடைய சீரியர்கள் மன்னுயிரால் தன் னுயிர்க்குத் துன்பம் நேர்ந்தகாலத்தும் மன்னுயிரைக்கொல்ல வும்,வருத்தவும் கருதமாட்டார்கள். அனேக மகான்கள் புல் லைக்கூட வருந்தும்படி மிதித்தற் கஞ்சியிருக்கிறார்கள், அஞ்சி நடந்தும் வருகிறார்கள்.

## திருக்குறள்.

(1) சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(2) கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(3) செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்.

(4) தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

முஸ்லிம் மகான்கள் திலகராயிலகிய ஹல்லாஜுல் றஹ்மக் குல்லா அவர்கள் ஓர் இடையன் ஆட்டை அறுத்து புசித்து விட, அதைக்கண்ட இடையன் வருந்துவதைக்கண்டு திரும் பவும் உயிர்ப்பித்தார்கள். நாகூர் ஷாகுல் ஹமீது ஆண்டவ ரவர்கள் ஒரு காலத்தில் திருவாரூர்க் கோவில் இடபத்தைப் புசித்து மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறார்கள் என்றுசரிதம் கூறு கின்றது. அதைப்பார்த்து, புலியைப்பார்த்த பூனையும் சூடு போட்டுக்கொண்டதுபோல்அத்தகைய பெரியோர்களை சாமா னியர்கள் உவமானமாக எடுத்தாள்வது பொருத்த மன்றாம்.

சீவன் முத்தித்தன்மையும் விதேக கைவல்லியமும் பெற்ற மகான்(முஹக்கிக்கீன்)களிற்சிலர் தங்களால் கொல்லப் பெற்ற பிராணிகளைத் திரும்பவும் உயிர்ப்பிக்குந் தன்மை தங்களிடமிருந்தாலும், புண்ணிய பாவ சமரச பேதாபேதத் தாலும் சிலசமயங்களிற் கொன்றுதின்றிருக்கிறார்கள். அவர் கள் எல்லையைவிட்டுத் தாண்டியவர்களாதலால் அவர்களை ஒரு புண்ணிய பாவமும் கட்டுப்படுத்தாது என்பது கவனித் தற்பாலது.

வம்சபரம்பரையாக ஆடு கோழிகளைத்தின்று வருபவர் களில் ஒருவன் கல்வி, கேள்வி, சாதுசங்கச் சார்பு முதலிய நல்லொழுக்கத்தால் பிராணிகள் மீது கிருபை வைப்பானே யானால், எந்தச் சாதியாயிருந்தாலும் அவனே சீவகாருணிய முடைய மஹான். மாமிசம் புசிக்குமொருவன் பரம்பரை யாகத் தமது முன்னோர்கள் புசித்து வந்த வழக்கத்தை அநு சரிக்கிறானே யன்றி, அவனால் அந்த வழக்கம் ஏற்படவில்லை; அதை அவன் நீக்கவேணுமென்று கருதினாலும், அவன் இனசனத்தார்கள் அங்ஙனம் நடக்கவிடாமல் கலியாண முதலியவற்றின் பந்திபோசனங்களில் மாமிச பட்சணம்

செய்யும்படி நிர்ப்பந்திக்கிறார்கள். அப்படி நடந்து கொள்ளா விட்டால், அது பலபேர் கேள்விகட்கு இடங்கொடுத்து, சரியான முகாந்தரஞ் சொல்லாவிட்டால் சிறுபான்மை சாதியை விட்டுவிலக்கவும் நேரிடுகிறது. என்ன செய்வான் பாவம்! குடும்பத்திலிருக்கிறவரையிற் குலாசாரப்படி நடந்து தானே தீரவேண்டியிருக்கிறது. ஆயினும் இராசதவுணவாகிய ஆடு, கோழி, மீன்முதலியவைகளைப் புசிப்பதிலிருந்து சிறிது சிறிதாகவாவது விலகிவிடுவதுதான் சிறந்தது.

தவத்திற் சிறந்தவனும், சகல பிராணிகள் மீது கருணை பாலிப்பவனும் எவனோ? அவனே அந்தணனென்னும் வாக்கியத்திற்கு இலக்கானவன். இதைவிட்டு விட்டுப் பார்ப்பன வருணத்தவர்களே அந்தணர்கள்; மற்றவர்கள் எத்துணை சிறப்புடையராயினும் அந்தணரல்லவென்று கருதுவது அறியாமையேயாம்.

திருக்குறள்.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

## இஸ்லாமிய சீவகாருணியம்.

இஸ்லாம் என்பது நல்லொழுக்கம் (ஈடேற்றம்) என்று பொருள். அங்ஙனமிருப்ப, புலால் புசிக்காத சில சமயிகள் இஸ்லாமிய மதத்திலும், அம்மதத்தினரிடத்திலும் சீவகாருணியமில்லையென இகழவாரம்பிக்கிறார்கள். ஆனால்,

தேரான் றெளிவும் தெளிந்தான்க ணையுறலும்
தீரா விடும்பை தரும்

என்ற திருக்குறட் கருத்தின்படி, இஸ்லாமிய மதத்திலுள்ள உண்மைகளை அம்மதத்தின் மேலான நூல்களைவாசித்தறியாமலும், வாசித்துத் தெளிந்தவர்களைக் கேட்டறியாமலும், சிற்சிலமனிதர்கள் பேருக்கு மாத்திரம் இஸ்லாமிய

றென்று சொல்லி, சட்டை, குல்லாய்களை அணிந்துகொண்டு மதுபானம், பிறர்மனை நயத்தல், அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தல் போன்ற பல கொடிய செய்கைகளைச்செய்து கொண்டு, படுகேடாய்த் திரிவதைக் கண்ட அன்னிய மதஸ்தர்கள், இதுதான் இஸ்லாமிய மதத்தின் ஒழுங்கென்று கருதி இகழ்வது கூடவே கூடாது. கொடிய பாதகமாகிய கொலை, களவு, கள், காமம், பொய், பொறாமை, வெகுளல் முதலிய சர்வ அநீதிகளையும் நீக்கும்படி முஸ்லிம் சமயத்தில் சொல்லப்பட்டிருப்பது போல வேறு எந்தச் சமய நூற்களிலும் அவ்வளவு தெளிவாய்ச் சொல்லவில்லையென்றே சொல்லலாம்.

முகம்மது நபி அவர்கள் அவதரிப்பதற்கு முன் அரபி தேசத்தவர்கள் எத்துணைத் தீய காரியங்களைப் புரிந்துகொண்டிருந்தார்கள் என்பதையும், அவர்களை ஒட்டகம், ஆடு, மாடு, கோழிகளைப் புசிக்கும்படி முகம்மது நபி அவர்கள் கூறியது என்ன நோக்கத்துடன் என்பதையும், அவ்வாறு கூறியது காருணியமேலீட்டினலா! அல்லவா ? என்பதையும் ஊன்றியறியவல்லார் பலர்க்கும் நன்கு விளங்கும்.

முகம்மது நபி அவர்கள் காலத்திற்குமுன் அரபியர்கள் மகா மூர்க்கர்களாகவும், நீதிநெறியிற் கட்டுப்படாதவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். வனவேடர்களைப்போல் தாம் சீவிக்கவேண்டியதுதான் பிரதானமெனக்கருதி, தமக்கெதிர்பட்ட மிருகம், பறவைகளை கொன்று புசிக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். அதுமட்டுமா ? அவர்கள் செய்து வந்த அக்கிரமங்களுக்கு அளவேயில்லை. அது காரணமாக அடியிற் கூறப்பெற்றுள்ள வேதத்தின் இரகசியத்தையும் சற்று ஆராயுங்கள்.

## வேதத்தின் இரகசியம்.

1. உங்கள்பேரில் உங்கள் தாய்மார்களை மனைவியாகப் பாவிப்பதை விலக்கப்பட்டது. உங்கள் புத்திரிகளையும்,

உங்கள் சகோதரிகளையும், உங்கள் அத்தை மார்களையும், உங்கள் சிறியதாயார், பெரியதாயார்களையும் விலக்கப்பட்டது.

2. உங்கள் சகோதரன் புத்திரிகளையும், உங்கள் சகோதரி புத்திரிகளையும், உங்களுக்கு பால்கொடுத்த தாய்மார்களையும், உங்கள் பால்குடி சகோதரிகளையும், உங்களின் மனைவியின் தாய்மார்களையும், உங்கள் பத்தினியின் முந்தின புருஷனின் புத்திரிகளையும் விலக்கப்பட்டது.

3. நீங்கள் உங்கள் பத்தினியுடன் புணர்ந்திருந்தால் கூடாது. புணராவிட்டால் குற்றமில்லை. உங்கள் புத்திரர்களின் மனைவிகளையும், இரண்டு சகோதரிகளை ஏககாலத்தில் மணம்புரிவதும் இதெல்லாம் முன்காலத்தில் நடந்துகொண்டு இருந்தது; இனிமேல் விலக்கப்பட்டது.

4. ஸ்திரீகளின் சம்மதமில்லாமல் வம்பாக அவர்களுக்கு வார்சாகிக் கொள்ளவேண்டாம். உங்கள் தந்தைகளுக்கு பத்தினியாயிருந்தவர்களை மணம்புரியவேண்டாம். முற்காலத்தில் நடந்தது போகட்டும். இனிமேல் அப்படிச் செய்யவேண்டாம்.

5. உங்களில் நின்றும் பரிசுத்தமான ஸ்திரீகள் அல்லது முன்னுள்ள வேதக்காரர்களில் நின்றும் உங்களுக்கு ஆகும். அவர்களை நீங்கள் மணம்புரிந்துகொள்ளலாம். மஹர் அல்லது விவாக நிதி தீர்மானமாகி விவாகமாய்விட்டால் சோரத்தனமாகாது. (அதாவது அரபிதேசத்தின் மூடத்தனயானவழக்கம், பிள்ளையில்லாதவன் மனைவி பிள்ளைக்காக வேறொருவனை நேசித்துக்கொள்வதுண்டு. வேத வாக்கியம் இக் கெட்ட வழக்கத்தைக் கண்டிக்கின்றது. இக் கெட்ட வழக்கத்துக்கு முஸாபிஹத்தென்று சொல்லப்படும்.)

6. நீங்கள் தற்கொலைசெய்துகொள்ள வேண்டாம். உங்கள் பிள்ளைகளைக் கொலைசெய்யவேண்டாம். அன்னியர்கள் வீட்டில் உத்தரவில்லாமல் மிருகத்தைப்போல் பிரவேசிக்க வேண்டாம். உத்தரவு பெற்றுக்கொள்வது அவசியம்.

நீங்கள் அன்னியர்கள் வீட்டிற்கு செல்வீர்களானல் சலாம் சொல்லுங்கள். அவர்கள் வீட்டில் ஒருவருமில்லாவிட்டால் அல்லது வீட்டுக்காரர்கள் உள்ளேவர உத்தரவு கொடா விட்டால் அவ்வீட்டிற்குப் போக வேண்டாம்.

7. அல்லது வீட்டுக்காரன் திரும்பிவிடும்படி கட்டளை யிட்டால் திரும்பிவிடுங்கள். அன்னியர்கள் வீட்டில் சுவ ரேறி அல்லது கூறையைப் பிரித்துக்கொண்டு செல்லவேண் டாம். வீட்டின் வாசற்படிவழியாகச் செல்லுங்கள். யாரா வது உங்களுக்கு சலாம் சொல்லுவார்களானல் நீங்களும் அதற்கு பதில் அழகான சலாம் சொல்லுங்கள். சாராயம், சூதாட்டம், விக்கிரக ஆராதனை, சோதிடம், சகுனம் இவை கள் பிசகான தொழில். ஆதலால் முற்றிலும் விட்டுவிடுங்கள் என்று கூறப்பெற்றிருக்கிறது.

இந்த வேதவாக்கியத்தின் மூலமாக அரபிதேசம் எத்த கைய சீர்கேட்டில் இருந்த தென்பதும், என்ன காரணத்தால் அல்லது எத்துணை அநீதிகளைப் புரிந்திருந்தால் வேதவசனம் மேற்கண்ட ஏழு பிரிவு (Para)களில் கண்டபடி கூறியிருக்கு மென்பதும் சிந்தித்தற்பாலது.

இவ்வித அடாத செயல்களைக்கண்ட நபிகணுயகம் அவர்கள் மற்றவர்களை நல்லொழுக்கத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று அதிக சிரத்தையும், கவலையும், மேற் கொண்டு, பலவகையான போதனைகள் செய்து, சன்மார்க்க மாகிய இஸ்லாம் மார்க்கத்தில் அவர்களைச் சேரும்படி செய் தனர். பின்னர் கண்டகண்டவிடத்தில் மனம் போனபடி யெல்லாம், கொலை-புலை புரிவது கூடாது. மனிதன் எல்லாச் சீவராசிகளிலும் சிறந்தவன். ஏனைய பிராணிகளை ஆதரிக்க வேண்டியது மனிதனுடைய முக்கிய கடமை. மனிதனுக்கு அவசியம் சீவகாருணியம்வேண்டும். ஒவ்வொருவரும் மனே பீஷ்டம்போல் வதைத்து புசித்தலை நிறுத்திவிடுங்கள்; ஏக தெய்வக்கொள்கையை அநுசரியுங்கள் என பற்பலவாறு போதனு மாரி பொழிந்தார்கள்.

பூர்வகாலந் தொடங்கி நாளிதுவரையில் புண்ணியபூமி யென்று பெயர் புனைந்து மதித்துவந்த இப் பரதகண்டத்தில் அநேக சமயிகள் பிராணிகளை வதைத்தல் பாவமென்று துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், பிரசங்கமூலமாகவும் சுவரொட்டி (Wall Poster) மூலமாகவும் கொன்றல், தின்றலால் ஏற்படும் பாவக் கருமங்களைப்பற்றி சித்திரப்படம் வரைந்தும் வெளியிட்டுவரும் நாகரீகமான இக்காலத்திலேயே அனேகர் எதிர்மறையாக "கொன்ருற் பாவம் தின்ருற் தீரும்" என்று குதர்க்கவாதம் புரிகின்றனர். அங்ஙனமிருப்ப பரமமூர்க்கர்களாகவும், மதோன்மத்தர்களாகவு மிருந்த அக்காலத்திய அரபியர்கள் சன்மார்க்க இதோபதேசம் புரிந்த நபிநாயகம் முகம்மது (சல்) அவர்களையே கொன்றுவிடத் தீர்மானித்து ஆரவாரம் செய்ததுமன்றி, நபி நாயகம் அவர்களது இஸ்லா மார்க்கத்தில் சேர விரும்பும் மற்றவர்களையும் கொல்ல எத்தனித்தார்கள்.

அஃதுணர்ந்த நபி நாயகமவர்கள் மகா ஜனங்களுக்கிருக்கும் துர்க்குணத்தை பின்னரும் ஆராய்ந்து இவர்களுக்கு இப்படிப் போதித்தால் நல்வழிக்கு வரமாட்டார்கள்; படிப்படியாகத்தான் போதிக்கவேண்டும். அவ்வாறு செய்யாததனாலே கிறிஸ்துவைக்கூட சிலுவையில் அறைந்தார்கள். மூடத்தனமும், வேடத்தனமும் உள்ள இந்த மது மாமிசபட்சண மதோன்மத்தர்களை ஒரே பிடிவாதமாக மாமிசபட்சணத்தை நிறுத்திவிடும்படி போதித்தால் சரிக்கு வரமாட்டார்கள். சிறிது சிறிதாய்க் குறைக்கும்படி செய்து இவர்களை சாத்மீகியாக்கல் வேண்டும் என்று சிந்திக்கலானூர்கள்.

இவர்கள் பற்பல கொடிய பிராணிகளைப் புசித்துவந்ததனாலேயே இத்தகைய மூர்க்க குணம் படைத்திருக்கிருர்கள். ஒரே பிடிவாதமாக மாமிசத்தை நீக்கவுமாட்டார்கள். ஆனால் சாந்தமான மிருகம், பட்சி முதலானவைகளைப் புசிக்கும்படி செய்துவந்தால் சிலகாலத்தில் சாந்த சொரூபியாகி விடுவார்கள். அதன் பின்னர் நமது மனோபீஷ்டத்தை அதாவது எந்

தப் பிராணிகளையும் கொல்லாமற் செய்துவிடலாம் என்று கருதி, சாதுவான ஆடு, மான், பசு முதலிய பிளவுபட்ட குளம்புகளோடு அசைபோட்டு இரையை மெல்லக்கூடிய பிராணிகளைப் புசிப்பது ஹலால் (ஆகும்) என்றும், அங்ஙன மின்றி புலி, பூனை, நாய்போன்ற காலில் நகமுள்ள பிராணிகள் வேறு பிராணிகளை வேட்டையாடிப் புசிக்கும் குண முள்ளதாதலால் அவைகளைப் புசிப்பது ஹறாம் (ஆகாது) என்றும், பறவைகளில் வாத்து, கோழி, குயில், கொக்கு, புறா முதலான (காலால் பிடிக்காமல் மூக்கால்கொத்திப் புசிக்கும்) பறவைகள் துஷ்டத்தனமில்லாததாதலால் அவைகளைப் புசிப்பது ஹலால் (ஆகும்) என்றும், கழுகு, காக்கை, பருந்து போன்ற (காலால் பிடித்துக்கொண்டு வாயால்கொத்திச் சாப்பிடுகிற) பறவைகள் ஹறாம் (ஆகாது) என்றும் இவ்வாறு நாளுக்குநாள் கொலை புலைகளை ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒருசட்டம் ஏற்படுத்தி அதைப் பலரும் தழுவும் படி செய்தனர்.

குறிப்பு.—பரம்பரையாக மது மாமிச பட்சணம்செய்து வந்த இவர்களை மாமிசமே புசித்தல் கூடாது என்று வரை யறுப்போமாயின் இவர்கள் ஒருக்கால் முன் புசித்த சுவையின் முதிர்ச்சியால் பிறரறியாதபடி கரவுமார்க்கமாக புசிக்க நேரிட்டாலும் நேரிடும் என்று கருதி அவர்களை அழைத்து, அன்பர்களே! உங்களுக்கு மாமிசாபேட்சை ஏற்படுமாகில் கண்டகண்டபடி பிராணிகளை வதைக்காமல் இன்னின்ன தன்மையுடையோர்களிடத்தில் சாதுவான பிராணிகளைக் கொண்டுபோய் இன்னின்ன தன்மையுடன் வேதமந்திரம் (தக்பீர்) சொல்லி இன்னின்னமாதிரியாக அறுத்து இன்னின்ன விதமாக புசியுங்கள் என்று ஒருவழி விட்டுக்கொடுத்தார்களே யன்றி மாமிசத்தையே புசிக்கவேண்டுமென்பது நாயகம் அவர்கள் நோக்கமன்று. அன்றியும் துஷ்டப் பிராணிகளைப் புசித்தால் மனிதர்கட்கும் துஷ்டக்குணம் அதிகரிக்கும் என்பது கருதியே சாதுவான பிராணிகளைப் புசிக்கும் படி கட்டளையிட்டிருக்கிறார்கள் என்பது இங்கு முக்கியம்,

மிருகங்களில் பசுவானது புண்ணியமும் சாத்வீகமுமுடையதாதலால் அதைச் சாப்பிடுபவர்களுக்குப் புண்ணியமுதிர்ச்சியால் சாத்வீககுணம் ஏற்படட்டும் என்று நபி நாயகம் அவர்கள் பசுவைப் புசிக்கும்படி கூறியதேயன்றி பசுவைக் கொல்வது புண்ணியமென்றகருத்துடன் கூறியதன்று. கொலை என்ருல் மிருகத்தில் ஆடு, மாடு, நாய், நரி எதைக் கொன்ருலும் கொலையேயன்றி இதிற் சிறிய கொலை, பெரிய கொலை என்பது கிடையாது.

கள்ளும் ஊனும்நீ விரும்பினுல் மகங்கள்செய்
காமத்தில் மனதானுற்

கொள்ளும் பெண்டொடு கலவிசெய் எனிலிவன்
குறையெலாந் தொடானென்றே

தள்ளும் வேதத்தின் சம்மதம் சகலமும்
தவிர்வதே கருத்தாகும்

என்ற கைவல்யக் கருத்தின்படி மனம்போனபடி பிராணிகளை வதைத்துப் புசித்த அரபியர்களை தங்கள் இஸ்லாமிய சட்டப்படி அறுத்துப்புசிக்கவேண்டும்; அவ்வாறு செய்யாமற் புசிப்பது ஹறும் என்று கூறியதானது இவர்கள் மார்க்க விதியை நன்குணர்ந்த ஒருவரைத் தேடி அறுத்துப் புசிப்பதற்குள் இச்சையானது மாறிவிடும். இப்படி நடந்துவந்தால் சிலகாலத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிவிடலாம் என்பதுதான் அவர்கள் கருத்து. அங்ஙனமில்லாவிட்டால் தொழுவதற்கு நேரம் வந்தபோது தங்கள் மடியின்மீது துயின்ற ஒரு பூனைக்குட்டிக்காகஅக்குட்டிக்குநித்திராபங்கம் செய்யக்கூடாதென்று கருதி ஒரு கத்தரிக்கோல் கொண்டு வரச்செய்து தங்கள் வஸ்திரத்தைக் கத்தரித்துவிட்டு எழுந்து வணக்க நிலையத்திற்குச் செல்வார்களா? இத்தகைய சீவகாருணியத்தை வேறு யாரிடமாவது நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? அங்ஙனமிருப்ப இஸ்லாத்தில் சீவகாருணியமில்லையென்று கூற எவர்தான் முற்படுவர்.

சீவகாருணியமே பிரதானமாகக்கொண்ட கௌதம புத்தர் தமது சீடர்களாகிய பர்மியர், சிங்களர் முதலானவர்களுக்கு சீவகாருணியத்தைப்பற்றி எவ்வளவோ பிரசங்கித்துப் போந்தனர். அது காரணத்தால் அவர்கள் வேடன் கையிற் சிக்கிய மிருகம் பறவை முதலானவைகளை விலை கொடுத்து வாங்கி உரிமையாக விட்டுவிடுகிறார்கள். அவைகள் தன் யதேச்சையாகச் சென்றுவிடுகின்றன. இவ்வழக்கத்தை இன்றளவும் இரங்கூன் நாட்டில் கண்கூடாகக் காணலாம். அங்ஙனமிருந்தும் புத்தருக்குப் பின், பரம்பரையாகப் புசித்துவந்த ஆடு, மாடு, பாம்பு, பன்றி முதலான பிராணிகளை அளவுகடந்து புசித்துவருகிறார்கள். அங்ஙனமே இந்து சமயாச்சாரிகள் எவ்வளவோ அரிய தொண்டுகளாற்றியும் இந்துக்களிற் பெரும்பாலோர் இன்னும் விட்டபாடோ இல்லை. எமனுடைய வாகனமென்னும் எருமைக்கடாவைக் கூட காளியம்மனுக்கென்று வெட்டி எமனுடைய வாகனத்தையும் புசிக்கும் பெரிய எமனாயிருக்கிறார்கள். அங்ஙனமே இஸ்லாமியர்களும் பழக்க வழக்கத்தினால் புசித்துவருகிறார்களேயன்றி முகம்மது நபி அவர்கள் கருத்து அவ்வாறன்று. ஆனால் வதைத்துச் சாப்பிடும் வழக்கத்தை நிறுத்தி அறுத்துச் சாப்பிடும்படி முகம்மது நபி அவர்கள் கட்டளையிட்ட உண்மைக் கருத்தென்னவென்று ஊன்றியறிய வல்லார்க்கு உண்மை புலனாகும்.

இஸ்லாமிய மதத்தில் சீவகாருணியத்தைப் பற்றிச் சொல்லப் பெற்றிருக்கின்றதென்பதையும், இல்லை என்பதையும் பின்வரும் சரித்திரந்தானுமறியலாம்.

முற்காலத்தில் அரபி தேசத்தில் ஷெய்கு சிபுலி றகுமத்துல்லா என்றொரு மகானிருந்தார். அவர் வெகுகாலம் தவம்புரிந்து சூக்கும காரண சரீரத்தை யடைந்தபின், “ஆனாலுமிந்த வுடலோடிருப்ப தருவருப்பே” என்னுங் கருத்தை யுணர்ந்து, இந்தத் தூல சரீரத்தை நீக்கக் கருதிச் சமாதி யடைந்துவிட்டார். பின் பொருகாலத்தில் தமது

நண்பராகிய ஓர் அசுகாபியுடைய கனவில் தோன்றினர். அப்போதந்த அசுகாபி பெரியவரை நோக்கி, "தாங்கள் கடவுள் சமுகத்தை நாடிச் சென்றீர்களே! அவர் சமுகத்தில் என்ன சம்பாஷணைகள் நடந்தது! அதனை அடியேனுக்குத் தயைபுரிந்து திருவாய்மலர்ந்தருளவேண்டும்" என மன்றாடிக் கேட்டார்.

கேளும் அசுஹாபியே! கடவுளானவர் என்னைக் கூப்பிட்டு நீர் செய்த பாவங்களையெல்லாம் நான் பொறுத்தாட் கொண்டேன்; ஆனால், என்னகாரணத்திற்காகப் பொறுத்தேனென்பதை அறிந்து சொல்லும் என்றார். அப்போது நான் செய்த தவத்திற் (அமலு)காகப் பொறுத்திருப்பீரென்றேன். அதற்கவர் நகைத்து அதற்கல்லவென்றார். நான் புண்ணிய தல (ஹஜ்ஜூ) யாத்திரை செய்ததற்காகவா என்றேன். அதற்குமல்லவென்றார்; அப்படியானல் நான் பல தேயங்கட்குஞ்சென்று சற்குருவைத்தேடி மெய்க்கல்விகளைக் கற்றுக்கொண்டதற்காகவா? அல்லது பலநாள் வருந்தி விரதம் (நோன்பு) அநுட்டித்ததற்காகவா! அல்லது தானதருமஞ் செய்ததற்காகவா? என்று கேட்டேன். அதற்கு மல்லவென்றார். ஆனல் வேறெந்தக் காரணத்திற்காக எனது பாவங்களைப் பொறுத்தாட்கொண்டீர்? அதைத் தேவரீரே சொல்லல்வேண்டுமென்றேன். அப்போது கடவுளானவர் சொல்கிறார்:—

நீர் ஒருநாள் பகுதாதுப் (Baghdad) பட்டினத்தின் கடைவீதி வழியாய் நடந்துகொண்டிருக்கும்போது ஒரு பூனைக்குட்டியானது குளிர் தாங்காமல் உடல் நடுங்கி வருந்தி ஒரு சுவரோரத்தில் ஒதுங்குவதைக்கண்டு மனமிரங்கி அப்பூனைக்குட்டியை மார்போடணைத்து உமது கைச்சட்டைக்குள்ளேவைத்தீர். அதனுலும் அதற்குக் குளிர் நீங்காததையுணர்ந்து, வைக்கோல் முதலிய உஷ்ணமான படுக்கையில் படுக்கவைத்து அதன் நடுக்கத்தை நீக்கிவைத்தீர். அந்தப் பலனுக்காகவே உமது தீமைகளை மன்னித்தேனென்றார்.

இஃதிங்ஙனமிருக்க, இஸ்லாமிய சமய சம்பந்தமான தமிழ் நூற்களில் பிரதமமான பொன்னரிய மாலையென்னும் ஒசியத்தில்

தாங்கு சந்தூக்குத் தாங்கினாலும்
 தனியே இரவெல்லாம் வணங்கினாலும்
வாங்கு சொல்லுமுன் ஒலுச்செய்தாலும்
 வகுலி சுவர்க்கந்தான் புகுவதில்லை.

எனவும் "இரக்க மில்லாதவனுக்கு சுவர்க்கமில்லை" எனவும் பிரசித்தமாகக் கூறுகின்றது. ஆதலால், எந்த வாக்கியத்திலும் விசேடார்த்தமிருந்தால் அதை ஒப்புக்கொள்ளவேண்டுமேயன்றி பேரைக் கேட்டமாத்திரத்திலேயே வெறுத்து இகழ்ந்துவிடக் கூடாது. இதனாலேயே ஞானவாசிட்ட நூலார் "ஊகமுளதேற் சிறுவருரை யுங்கொள்க" என்றனர்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.—(குறள்.)

அறநெறிச்சாரம்.

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையோர் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

காருண்ணிய மூர்த்தியாகிய நபிநாயகம் முகம்மது (சல்) அவர்கள் மான் முதலான மிருகங்களைச் சாப்பிடும்படி செய்தார்களே என்று ஆலசியம் அடையவேண்டாம். அவர்கள் ஓர் மானுக்காகப் பிணையாக நின்ற சரித்திரத்தை வாசித்துப் பாருங்கள்.

## மானுக்குப் பிணை நின்ற சீவகாருண்ணியம்.

முகம்மது நபி (சல்) அவர்கள் ஒருநாள் மக்கமா நகரத்துக்கு அடுத்த ஒரு சிறு குன்றின் பக்கத்தில் ஒரு வேடனைக்

கண்டார்கள். அவன் வனத்தில் வலைவீசிப் பெண்மான் ஒன்றைப் பிடித்துக் கட்டிவைத்துக்கொண்டு நின்றான். நாயகம் அவர்கள் அவ்வேடனிடத்தில் கட்டுண்டுகிடக்கும் மானைப் பார்த்துக்கொண்டே போனார்கள். நபிநாயகம் அவர்கள் தன்னை நோக்கிவருவதை அந்த மான் கண்டு தன் கண்களை யிமைக்காமல் நபி நாயகமவர்களைப் பார்த்தவண்ணமா யிருந்தது. நாயகமவர்கள் அவ்விடத்தில் நெருங்கி தங்கள் அசுகாபிகள் சூழநின்று, நெருப்புமூட்டி ஊனைவாட்டித் தின்றுகொண்டிருக்கும் வேடனையும், கட்டுண்டுகிடக்கும் மானையும் நோக்கினார்கள். அந்தப் பெண்மானானது, வெள்ளியை யுருக்கி வார்த்தாற்போல மடிமீறி யொழுகும் பாலுடன் அழுது நெட்டுயிர்த்து, கால்களைச் சேர்த்து இறுக்கிக் கட்டிய கட்டுடன் கிடந்து வருந்துவதை நபிநாயகமவர்கள் நோக்கி, அதன்பேரில் இரக்கமுற்று நின்றார்கள்.

மன இரக்கத்துடனும், கிருபாநோக்கத்துடனும் தன்னை யடுத்து நின்று பார்த்துக்கொண்டிருக்கும் நபிநாயகமவர்களை அந்த மான் பார்த்து, தனது வாலை யசைத்து "அஸ்ஸலாமு அலைக்கும் யா றசூலுல்லா" என்று சலாம் சொல்லி "அல்லாவுடைய றசூலே! என் வயிற்றில் ஒரு கன்று பிறக்காத மனக்குறையால் விசாரமுற்று, ஒரு கன்றை யீன்றேன். நாங்கள் ஒன்றாய்க்கூடி மேய்ந்து விளையாடிக்கொண்டிருந்த சமயம் எங்களுக்கு பகையாகிய வேங்கையின் கர்ச்சனையானது இடிபோல் கேட்டது. கர்ச்சனையைக் கேட்டு மயங்கி நின்றபடியால் இவன் வீசிய வலையில் இலகுவில் சிக்குண்டேன். நான் உயிரற்றபாவனையிற் கிடக்கும் வேளையில், தங்களின் பாதாரவிந்தங்களைத் தரிசிக்கப்பெற்றேன். என் மனத்துயர் தொலைந்தது. நான் விலங்கினத்தில் மிகத் தாழ்ந்த விலங்காயிருந்தபோதிலும். எனது வசனங்களை தாங்கள் சிந்தைகூர்ந்து கேட்பீர்களென்று திடங்கொண்டிருக்கிறேன். ஆனால் நான் இந்த வேடனுடைய கையால் இறந்துபோவதற்காக அஞ்சி இவ்வளவுதூரம் முறையிடவில்லை. உலகிலுள்ள சகல சீவன்களும் இறந்துபோவது சத்தியம். நானோ

பிறந்து நீண்டகாலம்வரையும் ஒரு கலையுடன் மருவியிருந்து கன்றையுமீன்று எல்லா இன்பங்களையும் அனுபவித்துவிட்டேன். இனிமேலும் நான் சீவித்திருக்கவேண்டு மென்பதென்ன? சமீபகாலத்தில் நான் இறந்துபோவதே உத்தமம். அன்றியும், அந்தகாரமான வனத்திலும், வனாந்தரத்திலும், மலையிலும் வருத்தப்பட்டு அவமிருத்துவமாய் மரணமடையாமல், தங்களுடைய பாதாரவிந்தத்தைத் தரிசித்து, இவ்வேடனுடைய உதராக்கினி யென்னும் பிணிதீரும்படி நான் மரணமடைவது புண்ணியமே. ஆயினும் என் கலையானது இதுவரையிலும் என்னைத் தேடி, தேடி எந்த எந்த மலைகளிலும், வனங்களிலும் ஓடித் திரிந்ததோ! அல்லது உயிருடன் இருக்கின்றதோ இல்லையோ! அது உயிருடனிருந்தாலும் ஒரு காய்ந்த புல்லையும் முகர்ந்து பாராதே! தண்ணீர் பருகாதே! ஓரிடத்திலும் நிலைகொள்ளாதே! உடல் வருந்தி உள்ளங்கலங்கி யழுமே! அதுபடும் துயரத்தை என்னால் சொல்லி முடியாதே! என்செய்கேன்!

நான் கன்றையீன்று இன்றோடே மூன்றுதினங்கள்தான் ஆயின. என் இளங்கன்று புல் பூண்டுகளைக் கடித்து மேயவும், தண்ணீர் பருகவும் இன்னும் பழகவில்லை. எனது மடியானது சுரந்து பாலும் விருதாவில் வழிந்தோடுகின்றது. ஆனதால், என் கன்று என்ன பாடுபடுகின்றதோ தெரியவில்லை. அக்கன்று கலையுடன் கூடிக்கொண்டதோ! அல்லது தறிகெட்டுச் சிதறிப்போனவிடத்தில் கொடிய வேங்கைக்கு இரையாயிற்றோ? என்னைத் தேடி மரச்செறிவுகளிலும் பொதும்பர்களிலும் ஓடித் திரிகின்றதோ? பசியின் கொடுமையால் வாட்டமுற்று இறந்ததோ? அல்லது எங்கேயாவது இளைத்து விழுந்து கிடக்கின்றதோ! இன்னபடிதான் என்று நான் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளக் கூடவில்லை. இந்தக் கவலைதான் என்மனதை உருக்குகின்றதேயன்றி, இவ்வேடன் நம்மைக் கொன்றுவிடுவானே! என்று நான் வருந்தவில்லை. இது உண்மை. இப்போது நான் இவ்வேடனுடைய பசியைத் தீர்த்துவைப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

ஆனால் தேவரீர் தாங்கள் எனக்காக இந்த வேடனிடத்தில் பிணைபட்டுக்கொண்டு என்னை யவிழ்த்துவிடவேண்டும். அப்படி விடுத்தால், நான் என் கலையைத் தேடிப்போய்க் கண்டு அதன் விசாரத்தை மாற்றி என் கன்றைக்கண்டு அதன் பசி தீரப் பாலூட்டி என் சாதிகளான மான்களுக்குச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி, என் கலையையும், கன்றையும், அவற்றோடு சேர்த்துவிட்டு. அதிக விரைவில் இங்கு வந்து சேருகிறேன். அதன்பின் தாங்கள் என்னை வேடனிடம் ஒப்புக்கொடுத்துவிட்டுத் தங்கள் பிணையை நீக்கிக்கொள்ளுங்கள் என்று கெஞ்சிற்று.

இவ்விதம் மான் சொன்னதை நபிநாயகமவர்கள் கேட்டு இரக்கமுற்று, அங்கு நிற்கும் வேடனை நோக்கி, "இந்தமான் வனத்தில் சென்று அதன் கன்றுக்குப் பாலூட்டி மீண்டு இங்கேவரும். அதுவரையும் அதற்காக நான் பிணை நிற்கிறேன். ஆகையால் அதை யவிழ்த்துவிடு" என்றார்கள். நபி நாயகமவர்கள் சொன்ன இச்சொல்லைக் கேட்டவுடன் வேடன் புயங்கள் குலுங்க நகைத்து, நபிநாயக மவர்களை நோக்கி, ஐயா! "எனது பசிப்பிணியை நிவர்த்திப்பதற்காக இந்த மானைச் சந்தோஷத்துடன் பிடித்தேன். இன்னொரு முறை இச்சொல்லைச் சொல்லாதீர்" என்றான். நாயகமவர்கள் அவனை நோக்கி நீ என் ஆலோசிக்கின்றாய்? என்னுடைய பிணையில் போகும் இந்த மான் ஒரு கடிகைப்பொழுதில் மீண்டு உன்னிடம் வரும். அப்படி வராவிட்டால் உன் பசி தீரும்பொருட்டு ஒருமானுக்குப் பதிலாக இரண்டு மான்களை நானே உனக்குத் தருகிறேன். நீ இதற்காக அஞ்சாதிரு" என்றார்கள். இச்சொல்லைக் கேட்ட அவ்வேடன், இவர் கூறுவது ஆச்சரியமாயிருக்கின்றது, இதைச் கண்டறிவோம், போன மான் வராவிட்டால் ஒன்றுக்கு இரண்டு தருவதாக ஒப்புக்கொள்ளுகிறாரே, நமக்கென்ன பயம்? என்று துணிந்து நாயகமவர்களை நோக்கி என்னைத் தாங்கள் வேடனென்று அறிந்திருந்தும் இவ்வாறு விருப்பங்கொண்டீர்கள். ஆகையால், தங்கள் வார்த்தைக்கு மாறுபேசாமல் இசைந்தேன்.

தாங்களே அந்த மானை யவிழ்த்துவிடுங்கள் என்முன். நபி நாயகமவர்கள் மானிடம் நெருங்கி, அதன் கால்களில் பிணித்திருந்த பிணிப்பை யவிழ்த்து "மானே!, உன் கன்றுக்குப் பாலூட்டி மீண்டுவா" என்று சொல்லி விடுத்தார்கள்.

மான் கலையையும், கன்றையும் தேடி ஓடியோடித் திரிந்து, ஒரு பக்கத்திலும் அவைகளைக் காணுமல் மனமுருகிக் கலங்கி நிற்கையில், ஒரு கற்செறிவுள்ள தானத்தில் தன் கலையும், கன்றும் நிற்கக்கண்டு அதிக ஆவலுடன் அவற்றையடுத்து கலையை நெருங்கி அதன் துயரத்தை மாற்றி கன்றை முகந்து வாலையசைத்து பாலூட்டிற்று. தனது அவா முடிந்தவுடன் என்னை நபிநாயகமவர்கள் பிணையாய் நின்று மீட்டு விட்டிருக்கிருர்கள் நான்போய் அவர்கள் பிணையை நீக்கிவிட வேண்டுமென்று அறிவிக்க கலைமான் கலங்கி, மனஞ்சோர்ந்து பெருமூச்செறிந்து பெண்மானை நோக்கி "என் உயிரே! பகைவராகிய மானிடர்கையில் சிக்குண்ட நம்மையொத்த ஒருமான் மீண்டுவந்தால் மறுபடியும் தன் பிராணனைப் பறிகொடுக்கும்படி அந்த மானிடர்வசம் போய்ச் சேருமா? என்று பலவாறு சொல்லித் தடுத்தது. பெண்மான் கலைமானை நோக்கி, எனக்காகவேண்டி ஒரு மகான் வேடனிடத்தில் பிணையாகியுள்ளார். நான் இப்போதே போய் என் சீவனை வேடனிடம் ஒப்புவித்து அம்மகானின் பிணையை மீட்க வேண்டும். இல்லாவிட்டால் கொடிய நரகத்தில் விழுந்து மாருதவாதனை அனுபவிக்க நேரிடும். இவ்வித மாறுபாடு நான் செய்வேனேயானல், தற்காலம் உயிரைக் காத்துக்கொள்வதொன்றுதானே இலாபம்? வேமுென்றும் இல்லையே, அதனுல் பின்வரும் கஷ்ட நஷ்டங்கள் எம்மட்டோ வுண்டு. அப்படி நான் மாறுசெய்து தற்காலம் சீவனைக் காத்துக் கொண்டாலும், எத்தனையாண்டுகள் வரையுந்தான் இருப்பேன். எப்போதாவது ஒருகாலத்தில் வனவேங்கைக்கு இரையாய் மாண்டுபோவது உண்மை. அப்படியிருக்க மாறு பண்ணுவது நியாயமாகுமா? என்னைப் போகவேண்டாமென்று விலக்குவது முறையன்று. நான் போய்த் தீரவேண்

டும்'' என்று சொல்லிக் கன்றைக் கலைமானிடம் ஒப்புவித்து விட்டு வரும்போது கன்றானது துள்ளித்துள்ளி தாய்க்குமுன் ஓடிவந்தது. தாய்மான் தடுத்தும் போகாமல் நின்றுகொண்டு, தாய்மானை நோக்கி நானும் உன் கூடவேவருவேன் என்றது. இதைக்கேட்ட தாய்மான், நமது கன்று கொண்ட கோறிக்கையைத் தடுக்காமல் கூட்டிக்கொண்டுபோவதே உத்தமம் என எண்ணிக்கொண்டு, தன் கன்றுடன் வனங்களை கடந்து வேடனிருக்கும் தானத்தை நோக்கி வந்தது. பிணையும், கன்றுமாக வருவதை நபிநாயகமவர்கள் கண்டு அகங்களித்து, வேடனை விளித்து "இதோ பார்த்தாயா? ஒருமானுக்கு இரண்டுமான் உன்னிடம் வருகின்றன'' என்றார்கள். இதைக் கேட்ட வேடன் மானைக்கண்டு ஆனந்தமுற்றான். பிறகு, கன்றும், தானுமாக வந்த மான் நபிநாயகமவர்கள் பாதாரவிந்தங்களில் விழுந்து பணிந்து "யாறசூலுல்லா! பாவியாகிய எனக்காக வேடனிடம் பிணைப்பட்டதங்கள்பிணையை மீட்டுக் கொள்ளுங்கள்'' என்றது. நபிநாயகமவர்கள் வேடனை நோக்கி "இதோ மானையொப்புக்கொள்'' என்று கருணைததும்ப இரக்கத்தோடு மொழிந்தார்கள். இவர் கடவுளுடைய உண்மையான றசூல்தான் என்று வேடன் உறுதிகொண்டு ஆனந்தபரவசமுற்று, வேறொன்றும் சொல்லற்கியலாதவனாகி, நாயகமவர்களின் பாததாமரைகளில் விழுந்து, கண்ணீர் சொரிய மனமுருகி "நபியே! தங்கள் அடியானாகிய நான் வனவேடர் குலத்திலுள்ளவன். இது நன்மை, இது தீமை எனப் பகுத்தறியமாட்டாத மிருகத்துக்குச் சமானமானவன். இத்தகைய என்னைப் பாவச்சிறையிலிருந்து மீட்டு இரட்சித்து நல்வழியடைந்துய்யச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். நபிநாயகமவர்கள் அவனுக்கு இணையற்ற நன்மார்க்கத்தை உபதேசித்து சீவகாருணிய முடையவனாகச் செய்து பேரின்பம் அடையும்படி செய்தார்கள். பின்னர் அவ்வேடர் அங்கு நிற்கும் மானைநோக்கி 'மானே உன்னால் எனக்குக் கிடைத்த நற்பேற்றுக்கு அளவில்லை. என் பாவங்களனைத்தும் தொலைந்தன. கொலைத்தொழிலை விட்டு விலகி சீவகாருணிய முடை

யவனுகினேன். இனி எனக்குக் குறையொன்றுமில்லை. நீயும் சஞ்சலப்படாமல் கன்றுடன்போய்ச் சலையோடு சேர்ந்து வாழ்'' என்றுர். நபிநாயக மவர்களும் மானைநோக்கி வனத்திற்சென்று இனத்துடன் வாழ் என்று உத்தரவு செய்தார்கள். மானும், கன்றும் நபிநாயகமவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கிப் புகழ்ந்து, வேடரையும் நோக்கி மகிழ்வுடன் புகழ்ந்துவிட்டு வனத்துட் சென்றன என்று முன் நூற்களில் கூறப்பெற்றிருக்கிறது.

புல், பூண்டுகளைப் புசிக்காமல், பிராணிகளைக்கொன்று புசிக்கும் தன்மையுள்ள பட்சி, மிருகங்களை மனிதர்கள் புசித்தால், இவர்களுக்கும் கொன்று புசிக்கும் குணம் ஏற்படும் என்று கருதியே நபிநாயகம் அவர்கள், அத்தன்மையானவைகளைப் புசிப்பது ஹறும் என்று விலக்கி, சாதுவான பிராணிகளைப் புசிக்கும்படி ஆக்ஞாபித்திருக்கிறுர்கள். அன்றியும் உங்கள் வீட்டுக்கு விருந்தாக இரண்டொரு மனிதர்கள் வந்தால் ஒரு கோழியை (ஒரு பறவையை) அறுத்துக்கொள்ளுங்கள். பத்துக்கோழிகளைப் புசிப்பதற்குத் தகுதியான விருந்தினர் வந்தால் அதற்காக பத்து உயிரைக்கொல்லாமல் ஒரு ஆட்டை அறுத்துக்கொள்ளுங்கள். பத்து ஆட்டு மாமிசத்தைப் புசிப்பதற்குத் தகுதியான விருந்தினர்கள் வந்தால் அதற்காகப்பத்து ஆடுகளைக் கொல்லாமல் ஒரு மாட்டை அறுத்து விருந்துசெய்யுங்கள். பல மாடுகளை அறுத்து விருந்து செய்யும்படியான நிலைமை ஏற்பட்டால் பல மாடுகளை வதைத்துக்கொன்று புசியாமல் ஒரு ஒட்டகத்தை அறுத்துவிருந்து செய்யுங்கள் என்று நபிமுகம்மது (சல்) அவர்கள் அக்காலத்திலேயே கட்டளையிட்டு அங்ஙனமே நடைபெறும்படிச் செய்து வந்திருக்கிறுர்கள். இதன் மூலமாகவும் என்னபுலப்படுகிறதென்றுல் பலவுயிர்களைக்கொன்று புசிப்பதைவிட ஒரு உயிரைக்கொல்வதோடாவது போகட்டும் என்றும், எப்படியாவது கொலைபுலைகள் குறைந்துபோகட்டும் என்றும் நபிநாயகம் அவர்கள் கருதியிருப்பதாக கண்

கெட்ட குருடருக்கும், கல்லாத மூடருக்குங்கூட வெட்ட வெளியாக விளங்குமே.

(ஆகையால் நம்மவர்களே! கேவலம் மிருகமாகிய ஒரு மானுக்காக மனமிரங்கி நபிநாயகம் அவர்கள் தாங்களே பிணையாக நின்று மீட்டினார்களென்றால் அவர்கள் உம்மத்தினராகிய நாம் சீவகோடிகளுக்காக எவ்வளவு உதவி செய்ய வேண்டு மென்பதை நாம் நன்குணராவிட்டால் நம்மினும் தாழ்ந்தவை எதுவுமில்லையென்று பிரத்தியட்சமாகின்றது.

"இரக்கமில்லாதவனுக்கு சுவர்க்கமில்லை"

என்ற நமது பெரியோர்கள் அனுபவ வாக்கியத்தை நன்றாக ஆலோசித்துப் பார்த்து நன்மார்க்கத்தைப் பெற்றுய்யுமாறு திருவருள் துணை செய்யுமாக.)

ஒரு முஸ்லிம், இந்து மதத்தின் கொள்கையையும், இஸ்லாமியக் கொள்கையையும் சீர்தூக்கிப் பாராமல் பிடிவாதமாகத் தன்மதமே சிறந்ததென்றும், அங்ஙனமே ஒரு இந்து, இஸ்லாமிய மதக் கொள்கையையும், இந்துமதக் கொள்கையையும் சரிவரச் சீர்தூக்கிப் பாராமல் தன்மதமே சிறந்ததென்றும், அங்ஙனமே கிறிஸ்து முதலான மதத்தினரும் தன் தன் மதமே உயர்ந்தது என்றும் வாதாடுகிறார்கள். ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்து நன்குணர்ந்து நடந்தால் மதப் போராட்டம் இந்து முஸ்லிமுக்குள் ஏற்படாமல் சகோதரத்துவம் அதிகரித்து ஒற்றுமையாக வாழலாம்.

வடலூர் இராமலிங்க சுவாமிகள்

# சீவகாருணிய ஒழுக்கம்.

## பரசிவ வணக்கம்.

அன்பெனும் பிடியு ளகப்படு மலையே
அன்பெனுங் குடில்புகு மரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தம ரமுதே
அன்பெனுங் கடத்து ளடங்கிடுங் கடலே
அன்பெனு முயிரொளி ரறிவே
அன்பெனு மணுவு ளமைந்தபே ரொளியே
அன்புரு வாம்*பர சிவமே.

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் அடையத்தக்க ஆன்மலாபத்தைக் காலமுள்ளபோதே அறிந்து அடையவேண்டும்.

அந்த ஆன்ம லாபம் எதுவென்று அறியவேண்டில், எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லாச்சீவர்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லாப் பயன்களையும் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப்பெற்று, எக்காலத்தும் எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே இந்த மனிதப் பிறப்பினால்

---

(*) பரசிவம் என்றது பிரம்மம்.

அடையத்தக்க ஆன்மலாபமென்று உண்மையாக அறிய வேண்டும்.

இயற்கை இன்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனால் அடையக்கூடுமென்று அறியவேண்டில், கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக்கொண்டே அடையக்கூடுமென்று அறியவேண்டும். கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனாற் பெறக்கூடுமென்று அறியவேண்டில், சீவகாருணிய ஒழுக்கத்தினால் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறியவேண்டும். கடவுள் அருளைச் சீவகாருணிய ஒழுக்கத்தினால் பெறக்கூடுமல்லாது வேறெந்த வழியாலும் பெறக்கூடாதென்பது எப்படியெனில்.

அருள் என்பது கடவுள் தயை, கடவுள் இயற்கை விளக்கம். சீவகாருணியம்என்பது சீவர்கள் தயை சீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயையைக்கொண்டு தயையைப் பெறுதலும், விளக்கத்தைக்கொண்டு விளக்கத்தைப் பெறுதலுங்கூடும். வேறொன்றிலும் பெறக்கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாமென்று அறியவேண்டும். அருளைப் பெறுவதற்குச் சீவகாருணியமே வழியாதலால், ஞானவழியென்பதும், சன்மார்க்கமென்பதும் சீவகாருணிய ஒழுக்கமென்பதும், அஞ்ஞானவழியென்பதும் துன்மார்க்கமென்பதும் சீவகாருணிய ஒழுக்கம் இல்லாமையென்றும் அறியப்படும். சீவகாருணியம் விளங்கும்போது அறிவும், அன்பும் உடனாக நின்று விளங்கும். அதனால் உபகாரசத்தி விளங்கும். அந்த உபகார சத்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும். சீவகாருணியம் மறையும்போது அறிவும், அன்பும் உடனாகமறையும். அதனால் உபகார சத்தி மறையும். உபகாரசத்தி மறையவே எல்லாத் தீமைகளும் தோன்றும். ஆதலின், புண்ணியம் என்பது சீவகாருணியம் ஒன்றே என்றும், பாவம் என்பது சீவகாருணியம் இல்லாமை ஒன்றே என்றும் அறியப்படும்.

225263

சீவகாருணிய ஒழுக்கத்தினல் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும், சீவகாருணிய ஒழுக்கத்தினல் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும், அவ்விளக்கத்தையும், இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்தவர் பூர்த்தியடைந்த சாத்தியர்களே சீவன் முத்தரென்றும்; அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயமாவார்களென்றும் சத்தியமாக அறியவேண்டும். ஆனல் சீவகாருணிய ஒழுக்கமென்பது என்னவெனில், சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடுசெய்து வாழ்தல் என்று அறியவேண்டும். சீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது உண்டாகுமென்னில், சீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக்கண்டபோதாயினும், கேட்டபோதாயினும், இவ்வாறு உண்டாகும் என்று அறிந்தபோதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறியவேண்டும். சீவகாருணியம் உண்டாவதற்கு உரிமை எதுவென்னில், சீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கையுள் ஏகதேசமாய்ச் சருவசத்தியுடைய கடவுளால் சிருட்டிக்கப்பட்டபடியால் ஓர் உரிமையுள்ள சகோதரர்களே யாவர். சகோதரர்களுள் ஒருவர் ஓர் ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும், துக்கப்படுவரென்று அறிந்தபோதும் அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதர உரிமை ஆதலின், ஒரு சீவன் துக்கத்தை அனுபவிக்கக்கண்ட போதும், துக்கப்படுமென்று அறிந்தபோதும் மற்றொரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்ம உரிமையென்று அறியவேண்டும்.

சீவர்கள் துக்கப்படுகின்றதைக் கண்டபோதும் சிலர் சீவகாருணியம் இல்லாமல் கடின சித்தர்களாய் இருக்கின்றார்கள். இவர்களுக்குச் சகோதர உரிமையில்லாமற்போவது ஏன் என்னில், துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும், துக்கப்படுகின்றாரென்றும், துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்ம அறிவு என்கின்ற கண்ணனது அஞ்ஞான

காசத்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியாலும், அவைகளுக்கு உபகாரமாகக்கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதம் இல்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனால் சகோதர உரிமையிருந்தும் சீவகாருணியம் உண்டாகாமல் இருந்ததென்று அறியவேண்டும்.

இதனால் சீவகாருணியமுள்ளவர் ஆன்மதிருஷ்டி விளக்கமுள்ளவரென்று அறியப்படும். சீவர்களுக்குப் பசி, தாகம், பயம்முதலியவற்றால் வரும் துன்பங்களெல்லாம் மனம், கண் முதலிய கரணேந்திரிய அனுபவங்களல்லது ஆன்ம அனுபவங்களல்ல. அதனால் சீவகாருணியங் கொள்வதில் விசேஷ பிரயோசனம் இல்லையே யென்னில், இந்தத் தூலதேகத்தில் சீவனாக இருக்கிற ஆன்மாவும் அறிவுக்கறிவாயிருக்கிற கடவுள் இயற்கை விளக்கமுந் தவிர, கரணம் இந்திரிய முதலிய மற்றவைகளெல்லாம் கருவிகளாகிய தத்துவ சடங்களே அல்லது சித்துக்களல்ல. ஆதலின், சுகதுக்கங்களைச் சடங்கள் அனுபவிக்க அறியா. செம்மண் சந்தோஷித்தது துக்கித்தது என்று சொல்லப்படாது. அதுபோல் மனஞ்சந்தோஷித்தது, துக்கித்தது என்று சொல்லப்படாது. செம்மண்ணினால் தேகவாழ்க்கைக்கு வீடுகட்டிக்கொள்வதுபோல மனம் முதலான கரணேந்திரியங்கள் சீவ வாழ்க்கைக்குக் கடவுளால் கட்டிக்கொடுக்கப்பட்ட ஒரு சிறிய வீடாகும். இன்ப துன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அனுபவிப்பானல்லது வீடு அனுபவிக்கமாட்டாது. அன்றியும், காசத்தினால் ஒளிமழுங்கி, உபநயனங்களாகிய கண்ணாடிகளால் பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது, அக் கண்கள் நீர் சொரியுமே யல்லாது கண்ணாடி நீர் சொரியமாட்டாது. ஆதலின், ஆன்மதிருஷ்டிக்கு உபநயனங்களாக இருக்கின்ற மனம் முதலான கருவிகள் சுகதுக்கங்களை அனுபவிக்கமாட்டா. ஆன்மாவே அனுபவிக்குமென்று அறியவேண்டும். ஒரு சீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது, துக்கம் நேரிட்டபோது மனம் தளர்கின்றது;

ஆதலின் சுகதுக்கங்களை அம் மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ என்னில், அறியப்படாது. பளிங்கினுற் செய்த வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேக விளக்கமும் தேகச் சோர்வும் அந்தப் பளிங்கு வீட்டில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவதுபோலும், கண்களின் மலர்ச்சியும் சோர்வும் அக்கண்களிலிட்ட உபநய னங்களில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவதுபோலும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்குண்டாகிற மகிழ்ச்சியும் தளர் வும் மனம் முதலான கரணேந்திரியங்களில் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுகின்றன. ஆதலின், சுகதுக்கங்கள் ஆன்மா வுக்கே அனுபவமென்றும், சுகதுக்கங்களை அறிந்து அனுப விப்பதற்கும் கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்கு உபகார கருவிகளாகுமென்றும் அறியவேண்டியது.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களில் அனேகர் பசி, தாகம், பயம் முதலியவற்ருல் மிகவும் துன்பப்படுகின்ற னர். என்னவெனில், முன் தேகத்தில் சீவகாருணிய ஒழுக் கத்தை விரும்பாமல் கடின சித்தர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களாதலால் கடவுள் விதித்த அருளாக்கினேப்படி பசி, தாகம், பயம் முதலியவற்ருல் மிகவும் துக்கப்படுகிருர் களென்று அறியவேண்டும். முன் தேகம் உண்டென்பது எப்படியென்னில், ஒரு வீட்டில் குடிக்கூலிகொடுத்துக் குடித் தனம் செய்யவந்தசமுசாரி அதற்குமுன் வேறெருகாலத்தில் அனுபவிக்கின்ற புவன போக சுதந்தரங்களையும் அவர்கள் இழந்து விடுவரென்றும் கடவுள் வேதத்தில் விதித்திருக் கின்ற படியால், ஊழ்வகையாலும், அசாக்கிரதையாலும், பசி கொலை யென்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துக்கொள்ளத்தக்க அறிவும், சுதந்தரமும் இல்லாத சீவர் கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத் தக்க அறிவும் சுதந்தரமுமுள்ள சீவர்கள் வஞ்சியாமல் தயையினுல் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கியமான லட்சியமென்றும், அதில் சத்தியமாக நம்பிக்கை வைத்துப் பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசிநீக்கியும், கொலைப்படும்

சீவர்களுக்குச் செய்வகையால் கொலை நீக்கியும் திருக்தி இன்பத்தை உண்டுபண்ணுவதே மேலான பிரயோசனமென்றும் அறியவேண்டும். பசி, கொலை, பிணி, எளிமை, பயம், இச்சை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்திசெய்விப்பது விதியாக இருக்கவும், இவ்விடத்து பசியினாலும், கொலையினாலும் வரும் அபாயங்களை மாத்திரம் நிவர்த்தி செய்விப்பது விசேடமென்று குறித்தது என்னென்று அறியவேண்டில்,

## அபர பர சீவகாருணியம்.

சீவகாருணிய ஒழுக்கத்தில் அபர சீவகாருணிய மென்றும், பர சீவகாருணியமென்றும் இருவகையாம். அவற்றில் பசி நீக்கலும், கொலை நீக்கலும் பரசீவ காருணியமாதலால் விசேடமாகக் குறிக்கப்பட்டதென்று அறியவேண்டும். அன்றியும் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்குப் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயை உடையவர்கள் தாகம் நீங்குதற்குத் தண்ணீர் கொடாமலிரார்கள். தண்ணீர் கொடுப்பது பிரயாசையுடையதன்று; தண்ணீர் ஏரி, குளம், கால்வாய் முதலானவிடத்தும் இருக்கின்றது. தாகத்தால் மாற்றிக் கொள்ளத்தக்க ஏகதேச அபாயம் நேரிடுமேயல்லது அதனால் தேகத்திற்குப் பழுது நேரிடாது; பசியினால்மாற்றிக்கொள்ளக் கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும். பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விக்கத்தக்க தயையுடையவருக்குப் பிணியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயை உண்டாகாமலிராது. பசி மிகுதியினாலேயே அப்பிணிகள் விருத்தியாகின்றன. ஆகாரப் பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன. பிணிக்கு வேறு மருந்து கொடுப்பினும் பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான ஆகாரமாய் இருக்கின்றது. பிணியோடு நெடுநாள் தேகத்தை வைத்திருக்கக்கூடும். (ஒரு நாளாகிலும்) ஆகாரம் இல்லாமல் தேகத்தை வைத்திருக்கக்கூடாது. பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்குவிக்கின்ற தயையுடையவர்களுக்கு இச்சையால் வரும் துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயைவராமல்

இராது. சீவர்களுக்கு உள்ளபடி பசி நேரிடுமாகில் ஆகாரத்திலும் அல்லது மற்றொன்றிலும் இச்சையேஇராது. ஆகாரங் கிடைக்கில் உண்டுபசி தீர்ந்தவர் தம்இச்சையைச் சிறிய முயற்சிகளால் முடித்துக்கொள்ளவுங் கூடும். அல்லது சமாதானம் செய்துகொள்ளவுங் கூடும். இச்சையோடு பலநாள் தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு (ஒருநாளும்) தேகத்தை வைத்திருக்க முடியாது. பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயையுள்ளவர்க்குச் சுதந்தரமற்ற சீவர்களது எளிமையை நீக்கத் தயை வராமலிராது. பசியால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை. எளிமையைச் சிலநாள் சென்று மாற்றிக் கொள்ளக்கூடும்; பசியை அவ்வாறு மாற்றிக் கொள்ளக் கூடாது; எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக்கூடும். பசியோடு வைத்திருக்க முடியாது. பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயை உடையவருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயை வராமலிராது. பசியினால் வரும் பயத்துக்கும், கொலையினால் வரும் பயத்துக்கும் மேற்பட்ட பயமேயில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக்கூடும்.பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக் கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு வைத்திருக்கப்படாது. பசியினால்வரும் அவத்தைகளும், துன்பங்களும், கொலையினால்வரும் அவத்தைகளும், துன்பங்களும் தம்முள் ஒத்திருக்கின்றன. ஆதலால் பசியினால் வருந் துன்பத்தையும், கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்திசெய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கிய லட்சியமென்று அறியவேண்டும்,

பசியினால் வரும் துன்பத்தை நீக்குதலும், கொலையினால் வரும் துன்பத்தை நீக்குதலும் சீவகாருணியத்திற்கு முக்கிய லட்சியமாக இருக்கவும், இவ்விடத்தில் பசிநீக்குதலைமாத்திரம் அடிக்கடி வலியுறுத்துவது என்னெனில், ஒரு சீவன் பசியினால் கொல்லப்படு மென்பதை அறிந்து, அந்தப் பசியைக் காருணியத்தால் நீக்கி உயிர் பிழைக்கும்படி செய்பவர்கள் வேறு வகையால் உயிர்க்கொலை நேரிட்டால்

அதற்கு இரங்கி, அந்தக்கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாமல் இரார்கள். கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாதவர்கள் பசியால் வருந் துன்பத்தையும் நிவர்த்தி செய்யத்தக்க தயையுடையவர்களாகார்கள். பசியால் வருங் கொலையை ஆகாரத்தாலன்றி வேறுவகையால் நிவர்த்தி செய்விக்கப்படாது. பகை முதலியவற்றால் வருங் கொலையை அநேக உபாயத்தால் நிவர்த்தி செய்விக்கக் கூடுமாதலால், கொலையால் வருந்துன்பத்தைப் பசியால் வருந் துன்பத்தில் அமைத்து, அடிக்கடி வலியுறுத்துகின்றதென்று அறியவேண்டும், அன்றியும், தாகத்தால் வருந்துகின்றவரும், பிணியால் வருந்துகின்றவரும், இச்சையால் வருந்துகின்றவரும், எளிமையால் வருந்துகின்றவரும், பயத்தால் வருந்துகின்றவரும், பசி வருத்தம் உண்டாகும்போது அவ்வவ் வருத்தங்களை எல்லாம் மறந்து, பசிவருத்தம் மேற்பட்டு ஆகாரந் தேட முயற்சி செய்கின்றார்கள். அன்றியும் அரசன் ஆக்கினையால் கொலைக்குற்றம் பற்றிக்கொலைசெய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும் பசி வந்தபோது, தன் பயத்தையும் துன்பத்தையுமறந்து, அந்தப்பசியை மாற்றிக்கொள்ள முயலுகின்றான். வைத்தியரால் தாம் இறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்துகொண்ட வியாதியாளரும், மூப்பாளரும்பசி வந்த போது, தமது துன்பத்தை மறந்து பசி நீக்க முயலுகின்றார்கள். பசிக்குத் தயவினால் ஆகாரங் கொடுக்கத் துணிந்தவன் வேறுவகையால் சீவர்கள் இம்சைப்பட்டு அழிவதற்குச் சம்மதிக்கவே மாட்டான். ஆகலானும், பசியால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விக்கிற தருமத்தை அடிக்கடி வலியுறுத்துவதென்று அறிய வேண்டும்.

பசியினால் வருங் கெடுதி எல்லாச் சீவர்களுக்கும் தேகநாசஞ் செய்வது உண்மையானால் எல்லாச் சீவர்கள் பசியையும் அறிந்து நிவர்த்தி செய்விக்கவேண்டும். அப்படி நிவர்த்தி செய்விக்கத்தொடங்கில், கடவுளால் சிருட்டிக்கப்பட்ட தேவர், மனிதர், நரகர், மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்கிற இவ் வெழுவகைப்பட்ட அளவிறந்த பேதங்களுடைய

சீவர்களது பசியை யறிந்து நீக்குவது அசாத்தியமாகுமே என்னில், தேவர்கள் மனித சுதந்திரத்தினும் மேற்பட்ட சுதந்திர முடையவர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியினாலேயே மாற்றிக்கொள்ளத்தக்க வல்லபம் உடையவர்களாதலால், அவர்கள் பசியைக் குறித்து மற்றவர் யோசிப்பது அவசியமன்றென்றும், தேவர்களுக்குப் பசி நேர்ந்தால் துன்பம் உண்டாகுமே என்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும், நரகர் தாம் பசியாற்றுவிக்கத் தக்க இடங்களில் இல்லாமல் வேறிடங்களில் இருக்கின்றபடியாலும், நரகர் பசிக்குத் தண்டனைப் பரிவாரங்களால் பசி ஆற்றுவித்தாலும், நரகர் பசியைக் குறித்து யோசிப்பது அவசியமன்றென்றும், நரகரும் பசிநேரிடில் வருந்துவார்களேயென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும், ஊழ்வகையினால் சிறிதுஞ் சுதந்திரமில்லாத மரம், புல் முதலிய தாவரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக்கின்ற தாவரவர்க்கங்களுக்குப் பசிகுறித்து நீர் விடுவது அவசியமென்றும், மற்றைத் தாவர வர்க்கங்களெல்லாம் அருள் நியதியின்படி ஆகாரங்கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றன ஆதலாலும், அவைகளுக்கெல்லாம் பசியறிந்து ஆகாரங்கொடுப்பது நமது சுதந்திரமன்று, கடவுள் சுதந்திரமென்றும், அவற்றைக் குறித்து யோசிப்பது அவசியமன்றென்றும், ஆகாரமில்லாவிடில் வருந்துமேயென்று இரங்குதல் மாத்திரம் அவசியமென்றும், நிலத்திலும், நீரிலும் ஊர்கின்ற உயிர்களுக்கும், பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் அவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி அருள் நியதி ஆகாரங் கொடுப்பிக்க அவை உண்டு பசியாறுகின்றன என்றும், அவ்வகைகளுக்குத் தக்க ஆதாரமறிந்து கொடுப்பது நமது சுதந்திரமன்று, கடவுள் சுதந்திரமென்றும் அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்திரத்தால் சம்பாதித்துக் கொள்ளுகின்ற பசு, எருது, எருமைக்கடா, ஆடு, குதிரை முதலிய சில மிருகங்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியாற்றுதல் அவசியமென்றும், மனிதர்களில் ஆண்மக்கள்

பெண்மக்கள் என்றிருவகைப்பட்ட எல்லா மக்களுக்கும் பசியால் வரும் நஷ்டங்களும் துன்பங்களும், பசி நிவர்த்தியால் வரும் இலாபங்களும், இன்பங்களும் பொதுவில் ஒரு தன்மையா யிருத்தலாலும், பசியால் வரும் நஷ்டங்களையும், துன்பங்களையும் மன முதலான அந்தக்கரண விருத்தியினாலும், கண் முதலான இந்திரியங்களாலும் மிகவும் அறிந்துகொள்கின்ற ஆன்ம அறிவு ஒத்திருத்தலாலும், மனிதர்களுக்கு ஊழ்வகையினால் அருள் நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டில் உண்டு சீவித்துத் தேகத்தை வைத்திருக்கக் கூடாமையாலும், தங்கள் முயற்சியாலும் அறிவாலுஞ் சுதந்திரத்தாலும் சம்பாதிக்கின்ற ஆகாமிய ஆகாரத்தால் பசி நீக்கித் தேகத்தை வைத்திருக்க வேண்டுமாதலாலும், ஆகாமியத்தால் சம்பாதிக்கின்ற சீவ சுதந்திரம் மனிதர்களுக்கு அருளால் மிகவும் கொடுக்கப்பட்டபடியால், ஊழ்வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படியாகவும், அந்தப் பசியை நீக்கும் நிமித்தம் ஒருவரை ஒருவர் எதிர்பார்க்கும்படியாகவும், அவர் தயவினால் ஆகாரங்கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்தவும், ஆகாரங் கொடுத்தவர் சித்தி, முத்திகளை அடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்டபடியாலும், மனித தேகம் மற்றச் சீவதேகம் போல இலேசிலே எடுக்கக் கூடாதாதலாலும், மனிததேகத்தில் ஆன்ம விளக்கமும், அருள்விளக்கமும் மிகவும் விளங்குதலாலும், இந்த மனிததேகம் போனால் மீளவும் இந்தத் தேகம் வருமென்கிற நிச்சயம் இல்லாமையாலும், இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும், இந்த மனித தேக மாத்திரமே முதற் சிருட்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருட்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற சீவகாருணிய விதியைப் பொதுவில் அவசியம் உறுதியாகக் கைப்பிடிக்கவேண்டுமென்று கடவுள் விதித்திருக்கின்றபடியாலும் பசியை ஆகாரத்தினால் நிவர்த்தி செய்

விக்கின்ற சீவகாருணிய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும் பான்மை நடத்தவேண்டுமென்று அறியவேண்டும்.

ஊழ்வகைக்குத் தக்கபடி மிருகம், பறவைமுதலிய சீவர்களுக்கு அருளால் நியதி யாகாரம் மாத்திர மிருக்க, மனிதர்களுக்கு மாத்திரம் ஊழ் நியதி யாகாரத்தோடு ஆகாமிய முயற்சி யாகாரமும் வேண்டுவது அவசியமென்றது எப்படியெனில்,மனிதர்கள் பிரார்த்தப்படி நியதியாகாரத்தைப் புசித்துப் பிராரத்துவ அநுபவத்தை நீக்கிக்கொள்வதற்கு, ஆகாமியத்தால் முயற்சியாகாரத்தைப் புசித்தும், கரணேந்திரிய தேகத்தை வலுவுள்ளதாகச் செய்துகொண்டு சன்மார்க்க சாதனத்தை அநுசரித்துச் சித்திமுத்தி யின்பங்களைப் பெறக்கடவரென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால் மனிதர்களுக்குப் பிராரத்த ஆகாரமும், ஆகாமியமுயற்சி யாகாரமும் அவசியம் வேண்டுமென்றறியவேண்டும். மிருகம், பட்சி, ஊர்வன, தாவரமென்கிற சீவதேகங்கள் தண்டனை நிமித்தம் விதித்த தேகங்களாதலால் பிராரத்த ஆகாரம் கடவுள் விதித்தவண்ணம் அருட்சத்தியால் தடைபடாமல் கொடுக்கப்படும். ஆதலால் ஆகாமிய ஆகாரஞ் சம்பாதிக்க வேண்டாமென்று அறியவேண்டும்.

ஆனால் சீவகாருணியம் எல்லாச் சீவர்களுக்கும் பொதுவென்று முதலில் குறிக்கப்பட்ட தென்னையெனில், சீவகாருணிய ஒருக்கத்தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால வருந் துன்பத்தை நிவர்த்திசெய்து ஆகாரத்தினால் திருப்தி யின்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும், பசியைப்போல் வேறு வகையினால் சீவகொலை நேரிடுவதானால் அந்தச் சீவகொலையைத் தம்மாற் கூடியவரையில் எவ்விதத்திலாயினுந் தடைசெய்து உயிர் பெறுவித்துச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்றும், பிணி, பயம் முதலிய மறற ஏதுக்களால் சீவர்களுக்குத் துன்பம் நேரிடில் அத் துன்பங்கள் தங்களால் நீக்கத் தக்கவைகளாகில் நீக்கவேண்டுமென்றும், மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் முதலிய

சீவர்களிடத்துப் பயத்தினால் வருந் துன்பத்தையும், கொலையினால் வருந் துன்பத்தையும் எவ்விடத்தும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், அவற்றுள் துட்டசீவர்களிடத்துச் சிறிது பயத்தினால் வருந் துன்பமாத்திரமே யல்லது கொலையினால் வருந் துன்பங்களைச் செய்யப்படாதென்றும், இவ்வகை முழுதுஞ் சீவகாருண்ணியமேயாதலால் எல்லா உயிர்களிடத்துஞ் சீவகாருணியம் வேண்டுமென்று கடவுளால் ஆணைசெய்ததென்றும் அறியவேண்டும்.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில் சில உயிர்கள் தாமச ஆகாரமாகிய மாமிச ஆகாரஞ் செய்வதனால் அவைகளுக்குப் பசி யாற்றுவிக்கும்போது அந்த ஆகாரத்தைக் கொடுத்து ஆற்றுவிக்கப் படாதோ என்னில், ஒரு சீவனைக் கொன்று ஒரு சீவனுக்கு மாமிசத்தால் பசி யாற்றுவித்தல் சீவகாருணிய ஒழுக்கமே யன்றென்றும், கடவுள் சம்மதமும் அன்றென்றும், இவற்றிற்கு முழு விரோதமென்றும் அறியவேண்டும். எல்லாச் சீவர்களுக்கும் இயற்கையுண்மை ஏகதேசங்களாகிக் கடவுளியற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றபடியாலும், கடவுளியற்கை விளக்கம் மறைபடும்போது சீவத்தன்மை இல்லாதபடியாலும், கடவுளியற்கை விளக்கம் ஒன்றோடு ஒன்று மாறுபடாதாதலாலும், கடவுளியற்கை விளக்கமும், சீவ இயற்கை விளக்கமும் அந்த அந்தத் தேகங்களில் விளங்குகின்றபடியாலும், ஒரு சீவனை வதைத்து அதனால் மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுவித்தல் சீவகாருணிய ஒழுக்கத்திற்கு முழு விரோதமென்று அறியவேண்டும். புலி சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு சீவனைக் கொன்று தின்று தாமச ஆகாரத்தால் பசியாற்றித் திருப்தி யின்பத்தை அடைந்து சந்தோஷிக்கின்றன. அந்தச் சந்தோஷம் கடவுளியற்கை விளக்க ஏகதேசமுஞ் சீவ இயற்கை விளக்க நிறைவுமெனக் கொள்ளக்கூடாதோ என்னில், கூடாது. தாமச ஆகாரத்தால் பூரண தத்துவமாகிய கடவுளியற்கை விளக்க ஏகதேசமும், ஏகதேச சத்துவமாகிய ஆன்ம இய

ற்கை விளக்கமும் விளங்காது, இருளால் ஒளி விளங்காதது போல். இதைத் தாமச ஆகாரம் என்பது என்னவெனில், கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்ம விளக்கத்தை மறைத்த இம்சை யாகாரம் ஆதலால் தாமச ஆகாரமாயிற்று. இந்த ஆகாரத்தால் வந்த திருப்தி யின்பமாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்கமென்னில், அனுதி பசுகரண மாயா விளக்கமென்று அறியவேண்டும்.

பசு என்பதென்னே? ஆணவம், மாயை, கன்மம் என்கிற மும்மல பந்தத்தால் ஒன்றுபட்டு அறிவிழந்த ஆன்மாவையே பசுவென்பது. அப்பசுவிற்கு விளக்கந் தோன்றுவது எப்படியென்னில், சூரியனை மறைத்த மேகவண்ணத்திலுள்ள இருளினிடத்துஞ் சூரியப்பிரகாச விசேஷம் தோன்றுதலால் அவ்விருளும் விளக்கமாக விளங்குகின்றது. அதுபோல், அசுத்த மாயா கரணங்களுந் தாமசகுணமும் இருள் வண்ணம் உடையவாயினும் தம்மால் மறைக்கப்பட்ட பரசிவ விளக்க விசேஷத்தால் அசுத்த மாயாகரணமும், தாமசகுணமும் அவை விளக்கமாக விளங்குகின்றன. இதனுல் தாமச ஆகாரத்தினுல் வரும் விளக்கம் அசுத்த மாயாகரண விளக்கமே யென்று அறியவேண்டும். ஆனுல் மரம், புல், நெல் முதலான தாவரங்களும் உயிராகவே கொல்லப்படுகின்றனவே. அவைகளை இம்சை செய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாமச ஆகாரமல்லவோ, அதனுல் வந்த சந்தோஷம் அசுத்தாந்தக்கரண சந்தோஷமன்றோ என்னில், மரம், புல், நெல் முதலான தாவரங்களும் உயிர்கள்தான்; அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏக தேச தாமச ஆகாரந்தான்; அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்த மாயாகரண சந்தோஷந்தான்; ஆனுல், மரம், புல, நெல் முதலான சீவர்கள் பரிசமென்கின்ற ஓர் அறிவையுடைய சீவர்களாதலாலும், அவ்வுடம்பில் சீவ விளக்கம் ஒரு சார் விளங்குதலாலும், அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும் மற்றவித்துக்களைபோலச் சடமாதலாலும், அவ் வித்துக்களை நாமே விதைத்து உயிர்விளைவு செய்யக்கூடு

மாதலாலும், அவ்வுயிர்களை வேறு செய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாமல் உயிர் தோன்றுதற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும், காய்களையும், கனிகளையும், பூக்களையும், கிழங்குகளையும், தழைகளையும் ஆகாரங்களாகக் கொள்வதேயன்றி, அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளில் வித்து, காய், கனி முதலானவை கொளளும்போது சுக்கிலம், நகம், ரோமம் முதலியவைகளை வாங்கும்போது இம்சை உண்டாகாமைபோல் இம்சைஉண்டாகாதபடியாலும், தாவர வர்க்கங்களுக்கு மனம் முதலான அந்தக்கரண விருத்தி யில்லாதபடியாலும், அது உயிர்க்கொலையுமன்று, துன்ப முண்டுபண்ணுவதுமன்று; அதனால் அது சீவகாருணிய விரோதமுமாகாது; அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும், சீவ விளக்க சந்தோஷமும் சீவவிளக்க சகிதமான கடவுள் விளக்கமே யாகுமென்று அறியவேண்டும்.

மரம் முதலிய தாவரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிர் ஏறுதற் கிடமாகிய சடங்களென்பது எப்படியென்னில், வித்துக்களில் சீவனிருந்தால் நிலத்தில் விதையா முன்னமே விளையவேண்டும்; நிலத்தில் விதைத்த காலத்துஞ் சில வித்துக்கள் விளையாமலே யிருக்கின்றன; அன்றியும் வித்தென்பது காரணம்: இந்தக் காரணம் உடம்பு தோன்றுதற்கேயென்று சிறு பிள்ளையாலும் அறியப்படும்; அன்றி உயிர் நித்தியம், உடம்பு அநித்தியம்; நித்தியமான உயிர் காரணம் வேண்டாது; அநித்தியமாகிய உடம்பே காரணம்வேண்டும். ஆகலின் வித்துக்களைச் சடமென்று அறியவேண்டும். ஆனால் வித்துக்களிடத்து ஆன்மாக்கள் ஏறுவது எப்படியென்னில், நிலத்திற் கலந்த வித்திற்கு நீர்விடில் அந்த நீரின் வழியாகக் கடவுள் அருள் நியதியின்படி ஆன்மாக்கள் அணுத்தேகத்தோடு கூடி நிலத்திற்சென்று, அந்நிலத்தின் பக்குவ சத்தியோடு கலந்து, வித்துக்களினிடமாகச் செல்கின்றனவென்று அறியவேண்டும். முளைகளையே பிடுங்கப்படாதென்று சிலர் சொல்லுகின்றார்கள். வித்து, காய், கனி, இலை முதலியவை

களைப் புசிக்கலாமென்று சொல்லுவ தெப்படியென்னில், வித்து நிலத்திற் படிந்தபின் வேர்வழியாக ஆன்மாவானது சென்று பக்குவ சத்தியிற் கலந்து வித்திலேறி முளைத்தபடியால் முளையானது வித்து காய் முதலியவைகளைப்போலச் சடமன்று. ஆதலால் முளைகளைப் பிடுங்கப்படா தென்பது உண்மையென்று அறியவேண்டும்.

வித்து, காய், கனி முதலியவற்றில் உயிர்க்சொலையில்லாவிடினும், சுக்கிலம் நகம், ரோமம் முதலியவற்றி லிருக்கிற அசுத்தமாவதில்லையோ என்னில் சத்துவவிருத்தியும், தாதுவிருத்தியும் இல்லாதபடியால் அசுத்தமில்லை. ஆகலின் மாம், புல் நெல் முதலியவைகளின் வித்து, காய், கனி, தழை முதலியவற்றைப் புசிப்பது சீவகாருணிய விரோதமன்றென்று அறியவேண்டும். மாமிச ஆகாரம் புலி முதலாகிய துட்ட மிருகங்களுக்கு நியதியாகாரம் அன்றோவென்று அறியவேண்டில், அது அவ்வுயிர்களுக்குச் சிருட்டி நியதியாகாரமன்று. பரம்பரை வழக்கத்தாற் பெற்ற ஆகாரமாமென்று அறியவேண்டும். ஆகலின் அதை நிவர்த்தி செய்வித்துச் சத்துவ ஆகாரங்களைப் புசிப்பிக்கும்படி செய்யவுங் கூடும் ஒரு சீலமுடையவன் கிருகத்தில் வளர்கின்ற பூனைக்கும், நாய்க்கும் வேறிடங்களிற் போய் அசுத்த ஆகாரங் கொள்ளாமல் காவல்செய்து அடிநாள் தொடங்கிச் சுத்த ஆகார வழக்கமே செய்விக்கின்றான். அவைகள் அவைகளைப் புசித்து உயிர் வழங்கி வருகின்றன. அப்படியே புலி, சிங்கம் முதலிய துட்டவர்க்கங்களையும் மேல் நின்று சுத்த ஆகாரத் தால் பழக்குவார் இல்லாமையால் அசுத்த ஆகாரங்களைப் பழக்கத்தாற் புசிக்கின்றனவென்று அறியலாம். ஆகலின் ஒரு சீவனைக் கொன்று மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுவித்தல் கடவுள் அருளுக்குச் சம்பந்தமுமன்று, சீவகாருணிய ஒழுக்கமு மன்று என்று சத்தியமாக அறியவேண்டும்.

இந்தச் சீவகாருணியம் என்கிற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம் அபர இன்பமென்றும், பர இன்பமென்

றும் இருவகைப்படும். இச்சை முதலியவைகளைப்பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் அபர இன்பமாகும். அவை இம்மையில் அனுபவிக்கின்ற இன்பங்களில் சிலவென்று அறியவேண்டும். அவை எவையென்னில் உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும், இருப்பதற்கு இடமில்லாமலும், உழுவதற்கு நிலமில்லாமலும், பொருந்துவதற்கு மனைவியில்லாமலும், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலிய வேறுவேறு கருவிகளில்லாமலும் துன்பப்படுகின்ற சீவர்கள் விஷயத்தில் சீவகாருணியந் தோன்றி, உடுப்பதற்கு வஸ்திரம், இருப்பதற்கு இடம், உழுவதற்கு நிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்தபோது, பெற்றுக்கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்ப விளக்கமும், அந்த இன்பத்தைக் கண்டு கொடுத்தவர்களுக்கு உண்டாகின்ற இன்ப விளக்கமும் கடவுள் கரணத்தில் ஏகதேசமும், சீவகரணத்திற் பூரணமுமாகத் தோன்றுகின்றவை. ஆதலால் அஃது அபர இன்பமென்று அறியவேண்டும். பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் பர இன்பமாகும். அவை இம்மையில் போக சித்திகளாலும், யோக சித்திகளாலும், ஞான சித்திகளாலும் படுகின்ற இன்பங்களும், முடிவில் அநுபவிக்கப்படும் மோட்ச இன்பமுமாகுமென்று அறியவேண்டும்.

உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருணியத்தால் ஆகாரங் கொடுக்க உண்டு பசி நீங்கிய தருணத்தில் அந்தச் சீவர்களுக்கு அகத்தினிடத்தும், முகத்தினிடத்தும் தழைத்து பொங்கித் ததும்புகின்ற இன்பமும், அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும், முகத்திலும் அவ்வாறுண்டாகின்ற இன்பமும் ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்திற் பூரணமாகத் தோன்றுகின்றவை யாகலான் பர இன்பமென்று அறியவேண்டும்.

வஸ்திரம், இடம், நிலம், பெண், பொருள் முதலானவைகளில்லாமல் துன்பப்படுகின்றவர்கள் அத் துன்பங்களை

மன எழுச்சியால் சகித்துக்கொண்டு, உயிர் தரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக்கூடும். பசியினால் துன்பம் நேரிட்டபோது மன எழுச்சியால் அத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளக் கூடாது. சகிக்கத் தொடங்கில் உயிரிழந்து விடுவார்கள். பசி நேரிட்டபோது பெற்றவர்கள் பிள்ளைகளை விற்றும், பிள்ளைகள் பெற்றவர்களை விற்றும், மனைவியைப் புருடன் விற்றும், புருடனை மனைவி விற்றும், அந்தப் பசியினால் வருந்துன்பத்தை மாற்றிக் கொள்ளத் துணிவார்களென்றால், அன்னியமாகிய வீடு, மாடு, நிலம் உடைமை முதலியவைகளை விற்றுப் பசியை நீக்கிக் கொள்வார்களென்பது சொல்ல வேண்டுவதில்லை.

உலகமுழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனும் பசி நேரிட்டபோது தனது அதிகார உயர்ச்சி முழுதும் விட்டு, தாழ்ந்த வார்த்தைகளால், 'என்னசெய்வது?' என்று அருகிலிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறை சொல்லுகின்றான்.

பகைவரால் எறியப்பட்டு மார்பில் உருவிய பாணத்தையும் கையால் பிடித்துக்கொண்டு எதிரிட்ட பகைவரையெல்லாம் அஞ்சாது ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்தவீரரும் பசி நேரிட்டபோது சௌகரியத்தை இழந்து, பசிக்கு அஞ்சிப் பக்கத்தில் நின்றவரைப் பார்த்து, 'இளைப்பு வருமே சண்டை எப்படிச் செய்வது?' என்று முறையிடுகின்றார்கள்.

இவ்வுலக போகங்களோடு இந்திரபோகம் முதலிய போகங்களையும் துரும்பாக வெறுத்து முற்றுந் துறந்து, அறிவை அறிந்து அநுபவம் விளங்கிய ஞானிகளும், இந்திரியங்களை அடக்கி மனோலயஞ்செய்து உண்மை நிட்டையிலிருக்கின்ற யோகிகளும், இறந்தோரையும் எழுப்பத்தக்க அளவிறந்த மகத்துவங்கள் விளக்கிய சித்தர்களும், முனிவர்களும், தபசிகளும் பசி நேரிட்டபோது தங்கள் தங்கள் அநுபவ இலட்சியங்களைவிட்டு, அடுத்த ஊரை நோக்கிப்பலிக்கு வருகின்றார்கள் ; பலி நேராதபோது நிலைகலங்குகின்றார்கள்.

சொப்பனத்தில் ஓர் இழிவு வரினும் அதுகுறித்து உயிர் விடத்தக்க மானிகளும், பசிநேரிட்டபோது சொல்லத் தகாதவரிடத்துஞ் சொல்லி மானங் குலை கின்றார்கள். சாதிசமய ஆசாரங்களில் அழுத்தமுடைய ஆசாரியர்களும், பசிவந்தபோது ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர்பார்க்கின்றார்கள். கல்வி கேள்விகளில் நிரம்பி, அறிதற்கரிய நுட்பங்களை அறிந்து செய்தற்கரிய செய்கைகளைச் செய்து முடிக்க வல்லவர்களும், பசிநேரிட்ட போது அறிவுங் கருத்தும் அழிந்து தடுமாறுகின்றார்கள். இராப்பகல் தோன்றாது புணர்ச்சி யின்பத்தில் பொங்கு கின்ற காமிகளும், பசி நேரிட்டபோது புணர்ச்சியை மறந்து காமத்தைக் கசந்து கலங்குகின்றார்கள். நாமேபெரியர் நமக்கு மேற் பெரியரில்லையென்று இறுமாப்படைகின்ற அகங்காரி களும் பசி நேரிட்டபோது அகங்காரங் குலைந்து, ஆகாரங் கொடுப்பவரைப் பெரியவராகப் புகழ்கின்றார்கள். ஒருவகைக் காரியங்களில் அனேக வகைகளாக உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும், பசி நேரிட்டபோது டம்பத்தை இழந்து மயங்குகின்றார்கள். இவரிவர் இப்படி இப்படியானால், ஒரு வகை ஆதாரமுமில்லா ஏழைகள் பசி நேரிட்டபோது என்ன பாடு படுவார்கள். அந்தக் காலத்தில் அந்த ஏழைகளுக்கு ஆகாரங்கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும்? அந்தச் சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப் பட்ட லாபம் கிடைக்கும்? இப்படிப்பட்டதென்று சொல்லு தற்கு அருமை யென்று அறியவேண்டும்.

சீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில் சீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது. அது மயங்கவே அறிவுக் கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவம் சோர்ந்து விடுகின்றது. அது சோரவே பிரகிருதிதத்துவம் மழுங்குகின்றது. அது மழுங் கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன. மனம் தடு மாறிச் சிதறுகின்றது. புத்தி கெடுகின்றது, சித்தம் கலங்கு கின்றது, அகங்காரம் அழிகின்றது, பிராணன் சுழல்கின்றது,

பூதங்களெல்லாம் புழுங்குகின்றன, வாதபித்த சிலேத்துமங்கள் நிலைமாறுகின்றன, கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது. காது கும்மென்று செவிடுபடுகின்றது, நா உலர்ந்து வறளுகின்றது, நாசி குழைந்து அழல்கின்றது. தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது, கைகால் சோர்ந்து துவளுகின்றன, வாக்குத் தொனிமாறிக் குழறுகின்றது: பற்கள் தளருகின்றன, மல சல வழி வெதும்புகின்றன, மேனி கருகுகின்றது. ரோமம் வெறிக்கின்றது, நரம்புகள் குறைந்து நைகின்றன, நாடிகள் கட்டுவிட்டுக் குறைகின்றன, எலும்புகள் கருகிப் பூட்டுக்கள் நெக்கு விடுகின்றன, இருதயம் வேகின்றது, மூளைசுருங்குகின்றது, சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது, ஈரல் கரைகின்றது. இரத்தமுஞ் சலமுஞ் சுவறுகின்றன, மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது. வயிறு பகீலென்று எரிகின்றது, தாப சோகங்கள் மேன்மேலும் உண்டாகின்றன. உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களும் அநுபவங்களுந் தோன்றுவது சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றன.

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு பசிநீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து உள்ளங்குளிர்ந்து அறிவு விளங்கி, அகத்திலும் முகத்திலும் சீவகளையும், கடவுள் களையும் துளும்பி, ஒப்பில்லாத திருப்தியின்ப முண்டாகின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டு பண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப்புண்ணியத்தை இணையென்று சொல்லலாம். இந்தப் புண்ணியத்தைச்செய்கின்ற புண்ணியர்களை எந்தத தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம். எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்சமென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால் நரகவேதனை, சனனவேதனை, மரணவேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே பசி வேதனையென்றும், அகம் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து, எக்காலத்தும் வேறுபடாதமோட்ச

இன்பமே ஆகாரத்திலுண்டாகும் திருப்தி யின்பமென்றும் அறியப்படும்.

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரை யொருவர் எதிர் பார்க்கமாட்டார்கள். எதிர்பாராதபட்சத்தில் உபகாரச்செய்கை தோன்றாது. அது தோன்றாதபோது சீவகாருணியம் விளங்காது. அது விளங்காதபோது கடவுளருள் கிடைக்கமாட்டாது. ஆதலால் பசியும் கடவுளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக்கருவி யென்றே அறியவேண்டும். பசியினால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷமும் தாய் பிதா பெண்டு பிள்ளை காணி பூமி பொன் மணி முதலானவைகளைக் கண்டகாலத்திலும் அடையார்களாயின், ஆகாரம் உண்டகாலத்தில் உண்டாகுஞ் சந்தோஷம் எப்படிப்பட்டதாக இருக்கும். ஆதலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களைக்கடவுளருளின் ஏகதேச சொரூப ரூப சுபாவங்களாகவே அறியவேண்டும். பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அறிவிக்கின்றது தான் சீவகாருணியம். பசியென்கிற விஷக் காற்றானது ஏழைகளின் அறிவாகியவிளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம். கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து, அவ்வாலயங்களை விளக்குஞ் செய்விப்பதே சீவகாருணியம். கடவுளின்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ்செய்கின்ற சீவரது தத்துவக் குடும்பமுழுதும், பசியினால் நிலைதடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து, அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருணியம். பசியென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப் புலியைக் கொன்று, அவ்வுயிர்களை இரட்சிப்பதே சீவகாருணியம். பசியென்கிற விஷந் தலைக்கேறிச் சீவர்கள் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை

இறக்கி, மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருணியம். பசியென்கிற கொடுமையாகிய தேள், வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக்கலங்குகின்ற ஏழைகளுக்கு, ஆகாரத்தால் அக் கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம். 'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாபி இன்றும் வருமே! இதற்கு என்ன செய்வோம்? என்று ஏக்கங் கொள்ளுகின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவது தான் சீவகாருணியம். 'வெயிலேறப்போகின்றதே, இனிப் பசியென்கிறவேதனைவந்து சம்பவிக்குமே, இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது?' என்று தேனில்விழுந்த ஈயைப்போலத் திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சீவகாருணியம். இருட்டிப் போகின்றதே! இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம், யாரைக்கேட்போம்,என்ன செய்வோம்? என்று விசாரத்தில் அழுந்திய ஏழைச்சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருணியம். 'நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது; கேட்டுக் கேட்டு வாயும் நொந்தது; நினைந்து நினைந்து மனமுஞ் சலித்தது; இனி இப்பாழ் வயிற்றுக்கென்ன செய்வோம்?' என்று கண்ணீர் வடிகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம். 'பகற்போதும் போய்விட்டது; பசியும் வருத்துகின்றது; வேறிடங்களிற் போக வெட்கந்தடுக்கின்றது; வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது; வயிறு எரிகின்றது; உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை; இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்?' என்று மனமும் முகமுஞ் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப்போல் மனமுருகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம். 'நாம் முன்பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பு அறிந்து பசியை நீக்கியிருந்தால் இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பு அறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்வதில்லை; இப்போது

நமக்கிப்படிச் செய்வாருமில்லை' என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச் சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம்பிடிக்க வைப்பதே சீவகாருணியம். தேகமுழுவதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிர் ஒடுங்கி முர்ச்சை மூடிய காலத்தும், அயலாரை கேட்கத் துணியாமற் கடவுளை நினைந்து நினைந்து நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல் அடி வயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்து படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப் பசிநெருப்பை ஆற்றுவிப்பதே சீவகாருணியம். நேற்றுப் பட்டினி கிடந்ததுபோல் இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? நாம் வாலிபவலிவால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும் பட்டினிக்குச் சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்பது பெரிதன்று; வயோதிக திசையால் மிகவுஞ்சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்து விடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்?' என்று எண்ணி யெண்ணிக் கொல்லன் உலையில் ஊத மூண்ட நெருப்பைப்போலப் பசி நெருப்பும், பய நெருப்பும், விசாரநெருப்பும் உள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக்கொண்டு, கண்களில் நீர் கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து, வருத்தத்தை மாற்றுவதே சீவகாருணியம் 'மண் கை கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில்லாதவர்களாகி, ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள். குருடும், செவிடும், ஊமையும், முடமுமாக இருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும்? பசி எப்படி நீங்கும்?' என்று தனித்தனி நினைந்து நினைந்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருணியம். பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தா

ராயினும், எந்தச்சாதியாராயினும், எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து, அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம். சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது பசி நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்.

பசியை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க புவன போக சுதந்திரங்களைப் பெறுதற்குரிய அறிவு இருந்தும், பூர்வ கர்மத்தாலும் அசாக்கிரதையாலும் அச்சுதந்திரத்தைப்பெற்றுக் கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து, அந்தப்பசி வருத்தத்தை நீக்கித் திருப்தி யின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருணியம் என்கிற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல் வீட்டுக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை யநுபவித்துவாழ வேண்டும். ஆகலின், சீவகாருணியம் என்கிற மோட்சவீட்டுத் திறவுகோலைக் காலமுள்ளபோதே சம்பாதித்துக்கொண்ட சமுசாரிகள் சரியை, கிரியை யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல, எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து, அவ்வீட்டுக் கதவைத் திறந்துக் கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள். புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல், புண்ணிய தீர்த்தங்களிலாடல், புண்ணியத் தலங்களில் வசித்தல், புண்ணிய மூர்த்திகளைத் தரிசித்தல். தோத்திரஞ்செய்தல், ஜபஞ்செய்தல், விரதம் இருத்தல், யாகஞ்செய்தல், பூசைசெய்தல் முதலிய சரியை, கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும், பத்தர்களும், இருடிகளும், உணவை நீக்கி, உறக்கத்தை விட்டு,

விடயச் சார்புகளைத் துறந்து, இந்திரியங்களை அடக்கி, மனோலயஞ்செய்து யோகத்திலிருக்கின்ற யோகிகளும், அளவிறந்த சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்தியாநித்தியங்களை அறிந்து எல்லாப் பற்றுக்களையுந் துறந்து பிரமாநுபவத்தைப்பெற்ற ஞானிகளும், சீவகாருணியமென்கிறதிறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானல், மோட்சமென்கிற மேல் வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்திற் காத்திருந்து, மீளவும் அத் திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லது, கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழமாட்டார்களென்று உண்மையாக அறியவேண்டும். இதனல் அறிவுவிளங்கிய சீவர்களுக்கெல்லாம் சீவகாருணியமே கடவுள் வழிபாடேன்று அறியவேண்டும்.

அன்றியும், சீவகாருணிய ஒழுக்கத்தை யுடையவர்களாகி, அருந்தல் பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை அநுபவிக்கின்ற சமுசாரிகளெல்லாம்சர்வசத்தியுடைய கடவுள் அருளுக்கு முழுதும் பாத்திரராவார்கள். சீவகாருணிய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், செபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுள் அருளுக்குச்சிறிதும் பாத்திரராகார்கள். அவர்களை ஆன்மவிளக்கமுள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. சீவகாருணியமில்லாது செய்யப்படுகின்றசெய்கைகளையெல்லாம்பிரயோசனமில்லாத மாயாசாலச் செய்கைகளே யாகுமென்று அறியவேண்டும்.

எல்லாச் சீவர்களும் கடவுள் இயற்கையுண்மை ஏகதேசங்களாதலாலும் அவரவரிடங்களிற் கடவுள் அருள் விளக்கம் விளங்குதலாலும், சமுசாரிகளுள் தமது தாய் தந்தை, புணர்ந்தோர், உறவினர், மக்கள், துணைவர் முதலிய குடும்பமட்டில் பசியாற்றிக் கொள்ளத்தக்க அற்ப சக்தியுள்ள சமுசாரிகள், தாய் பிதா மக்கள் துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினுற் பரதவிக்கவிட்டு, அயலார்க்குப் பசியாற்றத் தொடங்குதலும், தம்மிடத்துப் பசித்துவந்த அயலாரை அந்தப் பசியால் பரதவிக்கவிட்டுத் தங் குடும்பத்தார்

பசியாற்றத் தொடங்குதலும், கடவுளுக்குச் சம்மதமல்ல. ஆதலால், தமது குடும்பச்செலவைக் கூடிய மட்டில் சுருங்கச் செய்து இருதிறத்தார் பசியையும் நீக்குதல் வேண்டு மென்றும், அற்பசத்தியினுங் குறைவுபட்டு, தமது குடும்பமட்டிலும் பசியாற்று விப்பதற்குப் பிரயாசையால் மிகச்சிறிய முயற்சியுடைய சமுசாரிகள், தமது குடும்பத்திலாவது பசியாற்றுவித்துக்கொண்டு தம்மிடத்துப் பசித்துவந்த அயலார் விஷயத்தில் மிகவுந் தயையுடையவர்களாகி அவர் பசியை மற்றொருவரைக் கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்றும், இயல்புள்ள பிரபல சமுசாரிகள், தங்கள் தங்கள் வருவாய்க்குத் தக்க வரையில் தாய், பிதா, புணர்ந்தோர், மக்கள், துணைவர் உறவினர், சிநேகர், அடியார்கள், பெரியோர்கள், அடிமைகள், அயலார், பகைவர் முதலியவர்களுக்கும், தமது குடும்பத திற்குச் சகாயங்களாகத்தேடிய பசு, எருது, எருமை, ஆடு, குதிரை, தாவரமுதலிய பிராணிகளுக்கும், பசியை ஆற்றுவித்துத் திருப்தி இன்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும், விவாகம், புத்திரப்பேறு, தெய்வம் படைத்தல் முதலிய பலவகைச் செய்கைகளில், வேறு வேறு சடங்குகளும், வேறுவேறு பெருமைப் பாடுகளுங்குறித்துப் பொருட் செலவு செய்தலையமைத்து, விவாகமுதலிய அந்த அந்தச் செய்கைகளிலும், பசித்த சீவர்களுக்குப் பசியையாற்றுவித்து இன்பத்தை உண்டுபண்ணுகின்ற சிறப்பினையேசெய்ய வேண்டுமென்றும், அப்படிச் செய்யின் பசித்தவர் பசி நீங்கியடைந்த இன்பத்திலும் அநேக மடங்கு அதிகமான இன்பத்தைத் தாம் அடைவார்களென்றும் சத்தியமாக அறிய வேண்டும்.

சமுசாரிகள் விவாகமுதலிய விசேஷ காரியங்களில் பந்தலையலங்கரித்தும், அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல்பாடல் வரிசை ஊர்க்கோலம் முதலிய விநோதங்களையும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தியும் எக்களிப்பிலழுந்தி யிருக்

குந் தருணத்தில், பசித்த ஏழைகள் முகத்தைப் பார்க்கவுஞ் சம்மதிக்கவில்லை; இப்படிப்பட்ட சந்தோஷ காலத்தில் தமக்காயினுந் தமது மக்கள் துணைவர் முதலியோர்க்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது. அப்போது அவர்கள் அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப் படுகின்றார்கள். இப்படித் துக்கப்படும்போது அலங்காரஞ் செய்த பந்தலும், சங்கற்ப விகற்பமான சடங்குகளும், ஆடல்பாடல் வாத்தியம் வரிசை ஊர்கோலம் முதலிய விநோதங்களும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலியபெருமைப்பாடுகளும் அந்த ஆபத்தைத் தடை செய்யக் கண்டதில்லை. அந்தச் சுபகாரியத்திலுள்ளபடியே பசித்த சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியை நீக்கி, அவர்கள் அகத்திலும் முகத்திலும் கடவுள் விளக்கத்தையும் கடவுளின்பத்தையும் வெளிப்படச் செய்திருந்தார்களானால், அந்த விளக்கமும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தை நீக்கி விளக்கத்தையும் இன்பத்தையுஞ் சத்தியமாக உண்டு பண்ணுமல்லவா?

ஆதலின், விவாகமுதலிய விசேஷச் செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கொத்தபடி பசித்தவர்களது பசியை ஆற்றுவித்துத் திருப்தி யின்பத்தையுண்டு பண்ணுவது முக்கியமென்று அறியவேண்டும். சூலை, குன்மம், குஷ்டம், முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அநுசரித்தார்களானால் அந்தச் சீவகாருணிய அநுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்தி செய்து விசேஷ சௌக்கியத்தை உண்டுபண்ணு மென்பது உண்மை. பலநாள் சந்ததியில்லாமல் பற்பல விரதங்களைச் செய்து வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அநுசரிப்பார்களானால் அந்தச் சீவகாருணிய அநுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணுமென்பது உண்மை. அற்பவயதென்று குறிப்பினா லறிந்துகொண்டு இறந்து போவதற்கஞ்சி விசாரப்படுகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத்தக்கபடி

பசித்த ஏழைகளுக்குப் பசியை யாற்றுவிப்பதே விரதமாக அநுசரிப்பார்களானால் அந்தச் சிவகாருணிய அநுசரிப்புத் தீர்க்காயுளை உண்டுபண்ணும் என்பது உண்மை.

கல்வி, அறிவு, செல்வம், போகம் முதலியவைகளைக் குறித்து வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால் அந்தச் சீவகாருணிய அநுசரிப்பு கல்வி அறிவு செல்வம் போகம் முதலானவைகளை உண்டுபண்ணுமென்பது உண்மை. பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக்கொண்ட சீவகாருணியமுள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது; மண்ணுஞ் சூடு செய்யாது; பெருமழை, பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பஞ் செய்யமாட்டா; விடூசிகை, விஷக்காற்று, விஷசுரம் முதலிய அசாத்தியப்பிணிகளுமுண்டாகா. அந்தச் சீவகாருணியமுள்ள சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும், கள்ளர்களாலும், விரோதிகளாலுங் கலக்கப்படமாட்டார்கள்; அரசர்களாலும் அவமதிக்கப்படார்கள். சீவகாருணியமுள்ள சமுசாரிகளது விளை நிலத்தில் பிரயாசையில்லாமலே விளைவு மேன்மேலுமுண்டாகும்; வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும் உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும் சுற்றங்களாலும், அடிமைகளாலுஞ் சூழப்படுவார்கள்; துஷ்டமிருகங்களாலும், துஷ்டஜந்துக்களாலும், துஷ்டபசாசுகளாலும், துஷ்டதெய்வங்களாலும் பயஞ் செய்யப்படார்கள். சீவகாருணியமுள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அசாக்கிரதையினாலும், ஊழ்வகையினாலும் சத்தியமாக வாரா; பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டுபண்ணுகின்ற சீவகாருணிய ஒழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமுசாரிகள், தபசிகள், சந்நியாசிகள், ஆண்சாதியார், பெண்சாதியார், விருத்தர், வாலிபர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியஞ் செய்யத்தக்க

## புத்தர் சீவகாருணியம்

இந்தியாவின் வட எல்லைப் புறமாகிய இமயமலையில் நேபாளம் என்னும் தேயத்திற்கு அணித்தாக கபிலவாஸ்து என்ற நகரம் முற்காலத்தில் இருந்தது. அந்த நாட்டை சுத்தோதனர் என்பவர் பரிபாலனம் செய்து வந்தார். சாக்கிய வமிசத்தைச்சேர்ந்த அவர் மனைவியின் பெயர் மாயாதேவி. நெடுங்காலமாகப் பிள்ளை பிறக்காததால் தானதருமங்களைப் புரிந்தார்கள், விரதாதிகளை அநுட்டித்தார்கள், கடவுளை வேண்டினார்கள், முடிவில் ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு கௌதமன் என்று பெயரிட்டார்கள். கௌதமர் சிறு வயதிலேயே எதையும் ஆழ்ந்து சிந்திப்பார். எவரையும் கடிந்து சொல்லார், சிறு பிராணிகளுக்கும் தீமை செய்யார். அவர் வளர வளர அவருக்கு அறிவும், அருளும், அரிய குணங்களும் உடன் வளர்ந்தன.

சுத்தோதனர் சிறந்தபோர்வீரர், தம் குமாரரையும் அவ்வாறு செய்விக்க வேண்டுமென்று கருதி யானையேற்றம், குதிரை யேற்றம், படைக்கலப்பயிற்சி முதலியவற்றைச் செவ்வையாகப் பயின்று வரச்செய்தார். கௌதமர், கல்வியிலும், இராஜ காரியங்களிலும், மிகத்தேர்ந்தவராக விளங்கினர். ஆனால் அவருக்கு உலகவாழ்க்கையில் பிடிப்பில்லை. ஏழைகளைக் கண்டால் ஏங்கி நிற்பார். வருந்துவோரைக்கண்டால் தாமும் வருந்துவார். நோயாளிகளைக் கண்டால், தாமும் நோயுறுவார். வயோதிகர்களைக் கண்டால் வாட்டமுறுவார். உலகமெல்லாம் அவருக்குத் துக்க மயமாகத் தோன்றிற்று. அவர் எப்பொழுதும் ஓரிடத்தில் மவுனமாக இருந்து, எதையேனும் சிந்தித்த வண்ணமாக இருப்பார். அவரைக் காணுந்தோறும் சுத்தோதனருக்கு வருத்தமுண்டாவது வழக்கம். பிறகு சுத்தோதனர் நல்ல அழகுள்ள கன்னிகையைக் கௌதமருக்கு விவாகம் செய்து

வைத்தார். நாளடைவில் கௌதமருக்கு ஓர் ஆண்குழந்தையும் பிறந்தது. மனைவி மக்களாகிய பந்தங்கள் ஏற்பட்டும் கௌதமருக்கு, மனநிலைமட்டும் சிறிதும் மாறவில்லை.

கௌதம புத்தராகிய சித்தார்த்தர், அடிக்கடி தம்தோழரோடு வேட்டையாட வனத்துக்குச் செல்வார் மான் கூட்டங்களைக் கண்டபோது, அவைகளின் மருண்ட தன்மையை நோக்கி, "தீங்கு சிறிதும் செய்கலாத இப்பிராணிகளை நாம் கொல்லுதல் கூடாது" என்று எண்ணி அம்பு தொடுக்காமல் திரும்பி விடுவார். பந்தய காலங்களில், குதிரை மேற் செல்லுங்கால், அது சிறிது இறைத்துத் துன்புறுவதைக் காணினும், அதைக் காணச்சகியாதவராய்ப் பந்தய மிழத்தல் நன்று என மதித்து மீள்வார். ஒரு நாள் தன் தோழர்களுள் ஒருவனாகிய தேவதத்தன் என்பவன் ஓர் அன்னப்பறவையை அம்பால் எய்து வீழ்த்த, சித்தார்த்தர் அதனைப்பரிந்து எடுத்து, அதன் துன்ப நிலைகண்டு, தைத்த அம்பைப் பிடுங்கி எறிந்து, அதன் களைப்பை மாற்றிப் பாதுகாத்து வந்தனர். தேவதத்தன் அவரை நோக்கி தான் எய்த அன்னம் தன்னதே என்று கூறித்தன்பால் அதனைச்சேர்ப்பிக்கவேண்டினன். ஆனால் சித்தார்த்தர் "ஒரு பிராணியின் உரிமை கொல்லமுயன்றவனதோ?', காப்பாற்றியவனதோ?" என்று வினவி புன்முறுவல் செய்தனர். இதனைக்குறித்து விவாதம் நடந்தகாலை, மந்திரியரும் "கொல்லுதல் அருமையன்று; காப்பாற்றுதலே அருமையாம். ஆதலின் காப்பாற்றியவனதே உரிமை" என்று விரித்துக்கூற மகிழ்ந்தனர்.

"ஒருநாள் இடையர் சிலர் ஆடுகளை மந்தையாக ஓட்டிக்கொண்டு போவதைக் கௌதமர் கண்டார். கண்டதும், அந்த இடையர்களில் ஒருவனை நோக்கி, "ஐயா! இந்த ஆடுகளை எங்கே ஓட்டிக்கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்த இடையன், "சுவாமி! மகத தேசத்து மன்னராகிய பிந்து சாரர் ஒரு யாகம் செய்கிறார்! அதற்கு நூறு

ஆடுகளும், நூறு ஆட்டுக்குட்டிகளும் வேண்டும்! அதற்காக இவைகளை ஓட்டிக்கொண்டுபோகிறோம்" என்றான். அதைக் கேட்டதும் கௌதமருக்கு மனம் திடுக்கிட்டது. ஐயோ, இத்தனை ஆடுகளும் அநியாயமாக சாகப்போகின்றதே! என்ன செய்வது, இவைகளை எப்படியாவது காக்கவேண்டும் என்று தீர்மானித்து, தாமும் அந்த இடையரோடு போனார்.

'ஆடுகள் போய் யாக குண்டத்தை அடைந்தன. அங்கு வேதசாஸ்திரிகள் பலர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைக் கண்டதும் கௌதமருக்கு அடக்கமுடியாத ஆத்திர உண்டாயிற்று; பிந்துசார மகாராஜா வருமட்டும் அதை அடக்கிக் கொண்டிருந்தார். அவர் வந்ததும் கௌதமர் சீவகாருணியத்தைப் பற்றிப் பிரசங்கித்தார். அதைக்கேட்டதும் அனைவருக்கும் இரக்கம் உண்டாயிற்று. அந்த சாஸ்திரிகளும் மிருகபலி இடுவது தகாதென்று தேர்ந்தனர். அரசருக்கும் நல்லறிவு உண்டாயிற்று. அன்றுமுதல்மிருகபலி இடுதல் முதலியகாரியங்கள் தம் இராச்சியத்தில் நடவாதபடி பிந்துசாரர் ஏற்பாடுகள் செய்தார். பின்பு, ஆயிரக்கணக்கான மனிதர்கள் கௌதமருடைய போதனையை மேற்கொண்டார்கள்.

சில காலத்திற்குப் பின்னர் இராசக்கிருக நகரத்துக் கருகேயுள்ள வனத்தில் வசித்துவந்தபோது, ஒரு நாள் பல இடையர்கள் ஓர் ஆட்டுமந்தையை ஓட்டிக்கொண்டு வருவதைக்கண்டனர். அம்மந்தையுள் ஓர் ஆட்டுக் குட்டி காலில் அடிபட்டதால் வருந்திக் கதறிக்கொண்டே வருவதையும், அதன் தாய் அதற்காகப் பரிந்து வருந்துவதையும் கண்ணுற்றபோது பெரிதும் துயருற்று அக்குட்டியை உடனே எடுத்து அணைத்து, மிகுந்த பரிவோடு அதன் உடலைப் பல கால் மெல்லத் தடவிப் பாராட்டினர். குட்டியும் தாயும் வருத்தம் ஒழிந்தனவாய் அவரை அன்போடு நோக்கின. அப்போது அவர் அந்த இடையர்களை நோக்கி "இந்தக் கடுவெயிலில் இக்காட்டு வழியில் இவைகளை ஏன் வருத்தி ஓட்டிச் செல்லுகிறீர்கள்" என்று வினவினர்.

அவர்கள் "ஐயனே! இந்நாட்டு அரசனாகிய பிம்பசாரன் தான்செய்யும் யாகத்திற்கு நூறு ஆடுகள் உடனே வரவேண்டுமெனக் கட்டளையிட்டிருக்கிறான்; ஆதலால் விரைந்து ஓட்டிச்செல்லுகிறோம்" என்றார்கள். அதனைக் கேட்ட சித்தார்த்தர் "யானும் உங்களுடன் வருகின்றேன்; என்னையும் அழைத்துச் செல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். அவர்கள் அவரைப்பற்றி வியப்புற்றாராயினும் மகிழ்ச்சியோடு அழைத்துச்சென்றனர். சித்தார்த்தர் யாக சாலையை அடையும்வரை சிறிதும் வருத்தம் பாராட்டாது அந்த ஆட்டுக்குட்டியைச் சுமந்து சென்றார். மாலையில் பிம்பசாரன் நகரத்தை அவர்கள் அடைந்தனர். நகர மாந்தர் பலரும் சித்தார்த்தரைப் பெரும்வியப்போடு நோக்கினர். யாகத்திற்கு வேண்டிய ஆடுகளுடன் முனிவர் ஒருவர் வந்திருக்கின்றனர். என்று அரசனுக்கு அறிவித்தனர். அரசன் யாக சாலையின் நடுவே தன்னை இருபுறமும் வேதியர்கள் சூழநின்று கொண்டிருந்தனன். யாககுண்டத்தில் தீ வளர்த்து நெய் விட்டு மந்திரம் கூறி ஓமம் செய்தார்கள். அரசன் முன்னர் பலி பீடத்தில் ஒரு செம்மறியாடு கட்டுண்டிருந்தது. ஓர் அந்தணர் ஓங்கி உயர்த்தியவாளுடன் அதனைக்கொல்லுமாறு நின்றனர். ஓங்கிய வாளை வீழ்த்தும் தருணத்தில், சித்தார்த்தர் சரேலெனச்சென்று அந்த அந்தணர் கையைப்பற்றி வாளைப் பிடுங்கி எறிந்துவிட்டு, அங்கு கட்டுண்ட ஆட்டையும் அவிழ்த்து அதன் மனம்போல் போகவிடுத்தார். அவர் துணிந்த செயலை ஒருவரும் தடுக்கவில்லை. பின்னர் அரசனை அணுகித் தமக்குப்பேச அநுமதிதரல் வேண்டுமென்றனர். அரசன் அதற்கிணங்க, அங்குகூடியிருந்த யாவருக்கும் மனம் உருகுமாறு உயிரின் தன்மையையும், இரக்கத்தின் பெருமையையும், கொல்லாமையாகிய அறத்தின் சிறப்பையும், யாக காரியங்களுக்குக் கொலையைச்செய்தலின் இழிவினையும் பலமுகமாகத் தெளிவாகவும், விரிவாகவும், உருக்கமாகவும் எடுத்துரைத்தார். அவர் கூறிய உபதேச மொழிகளைக் கேட்ட யாவரும் தாம் நல்லறத்தைத் தெய்வத்தின்

வாயிலாய்ப் பெற்றதாகப்பாராட்டி அவரை இறைஞ்சி வணங்கினர்கள். பிம்பசாரனும் அவர் உபதேசத்தை மிகுந்த அன்போடு ஏற்றுக்கொண்டு தான் நாடு முழுவதிலும் கொல்லாமை என்னும் நல்லறம் பரவுமாறு விரைவில்வேண்டியவற்றைச் செய்தனன். பிம்பசாரனை நல்வழிப்படுத்திய பின்பு சித்தார்த்தர் மீட்டும் கானகம் புகுந்து பலநாள் இவ்வுலக வாழ்க்கை, சுக துக்கங்கள், இறப்புமுதலியவற்றைக் குறித்துப் பலகால் சிந்தித்து வந்தார். இப்படிச் சிந்தனையிலாழ்ந்து பலதினங்கள் உண்ணுமலே இருப்பார். இவ்வாறு உணவு உண்ணுமையாலும் ஆழ்ந்த சிந்தனையாலும் ஒருநாள் மூர்ச்சையுற்று வீழ்ந்து கிடந்தார். அவ்வழியே சென்ற ஓர் ஆட்டிடையன் அவர் நிலையைக்கண்டு இரக்கங்கொண்டு ஒருவெள்ளாட்டை அவர் அருகே ஓட்டிச்சென்று அதன் பாலைக்கறந்து அவர் வாயில்வார்க்க, அவர் மூர்ச்சை தெளிந்து எழுந்தார்.

பின்னர் அவர் நைரஞ்சரை என்னும் நதிக்கரையை அடைந்து ஆங்குள்ள ஓர் அரசமரத்தடியில் இருந்துகொண்டு இருபத்தெட்டு நாள் இரவும்பகலும், உண்ணுமலும் உறங்காமலும் உண்மையினை ஆராய்ந்து கொண்டிருந்தார். இருபத்தொன்பதாவது நாள் காலையில் அருகேயுள்ள ஊரிலுள்ள சுசாதை என்னும் இடைச்சி, தான் வழிபடுதெய்வத்திற்கு நிவேதனம் செய்யச்சமைத்துக் கையில் கொணர்ந்த பாலன்னத்தை ஊட்டினள்; அதை உண்டு சித்தார்த்தர் ஞான ஒளியால் விளங்கினர். இருபத்தொன்பதாம் நாளிரவில் தத்துவ ஞானம் அவரிடம் விளங்கின. இவ்வரிய ஞானத்தைப் பெற்றபின் சித்தசாந்த மடைந்து பிறர்க்கு உபதேசித்து அவர்களை உய்விக்க எண்ணித் தன்னைச்சார்ந்த யாவர்க்கும் உபதேசிக்கத் தொடங்கினர்.

தம் நாட்டிலும் பிற நாடுகளிலும் பலர் அவர் புதிய உபதேசத்தை மிகுந்த ஆர்வத்தோடு பெற்றனர். இங்ஙனம் இப்பெரியாரால் மிக்குயர்ந்த சமயமே புத்தசமயம், பௌத்

தம் என்று வழங்கப்படும் பல அரசர்கள் அச்சமயத்தைக் கொண்டு நம் நாட்டில் பரப்பினர். புத்தர் பின்பு நாற்பத்தைந்து வருடம் சீவித்திருந்து அப்பால் முத்தியடைந்தனர் என்று சரித்திரங்கூறுகின்றன. இதைச் சித்தார்த்தராகிய கௌதம புத்தருடைய சரித்திரத்தை வாசிப்போர் கேட்போருக்கு மெய்த்துறவும், மெய்ந்நெறியும் எளிதில் வந்தெய்து மென்பது எமது துணிபு.

## சிவஞான வள்ளல்.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்றா னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனு
மிலகிய விரக்க மின்றேல் எழுநர கடைவ னன்றே.

இத்திற னருட்கைப் பற்றி யுயிர்க்கெலா மிதத்தைச்செய்க
சத்திய விரக்க மின்றேன் முத்தியைச் சார ஞகும்
பத்தியால் யோகஞ் சாரும் யோகத்தாற் பரம ஞானஞ்
சித்தியா மிதற்கா தாரஞ் சீவகா ருணிய மன்றே.

முற்காலத்தில் சிபி என்ற ஓர் அரசன் மனுநெறி தவருது அரசு புரிந்து வந்தான். ஒருநாள் அவன் தன் உத்தியான வனத்தில் உலாவிக்கொண்டு அங்குள்ள சிருட்டி விநோதங்களை நோக்கி மெய்ம்மறந்து. சிருட்டி கர்த்தாவினிடம் தன் மனதைச்செலுத்துங் காலத்தில் வல்லூறு பட்சியினல் துரத்தப்பட்ட மாடப்புருவொன்று பறந்து வந்து சோர்ந்து அவன்மடியில் விழுந்தது. வல்லூறுக்குப் பயந்து, அது தன்னிடம் சரண் புகுந்ததென்றே சிபிக்குத்தோன்றிற்று. உடனே பின்தொடர்ந்து வந்த வல்லூறை, மாடப்புருவின் அருகில்வர வொட்டாது தடுத்துவிட்டான். அப்பொழுது வல்லூறு மனிதக்குரலில், "எனக்கு இயற்கையாக இரையாய் ஏற்பட்ட இந்தப் பிராணியை நான் தொடக்கூடாதென்று தடுப்பது நியாயமோ"? என்று ஆட்சேபித்தது. புருவையும் காப்பாற்றி, வல்லூறுக்கும் நியாயம் பகரவேண்டிய அரசன், புருவின் நிறை எவ்வளவோ அவ்வளவு தன் தேகத்திலுள்ள மாமிசத்தைக் கொடுப்பதாக வல்லூறுக்கு

வாக்களித்தான். அதற்கு வல்லூறு இசைய, அரசன் ஒரு பெரிய தராசைக்கொண்டு வரச்செய்து ஒருதட்டில் புறுவை வைத்து, மற்றொரு தட்டில் தன் தொடையிலிருந்து கொஞ் சம் மாமிசத்தை அறுத்து வைத்தான். புறு கனமாக இருந் தது. அதற்கும் மனம் வருந்தாது மிகுந்த சந்தோஷத் துடன் சிபி தனது மாமிசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அறுத்து வைத்தான், எவ்விதம் செய்தும், புறுவிருந்த தட்டு கனமாகவே தாழ்ந்திருந்தது. சிபி சற்று யோசித்து, சீவ காருணியத்தால் தூண்டப்பட்டு தானே அந்தத்தராசில் ஏறி னன். இந்தச் சீவகாருணிய முயற்சியைக் கண்டதும், வல் லூறும் புறுவும் தமது நிசரூபமாகிய தேவ உருவத்தைக் காட்டிச் சிபியின் சீவகாருணியத்தை பற்றி மிகப்புகழ்ந்து பேசி, சிபிக்கு . முன்நிலைமையும், தீர்க்காயுளும், சிறந்த செல்வமு முண்டாகுமாறு அனுக்கிரகித்து மறைந்தனவாம்.

## குறள்.

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

சர்வ சமயத்தினரும் கொலை புலைகளை அவசியம் நீக்கவே வேண்டும் என்பது தான் அறிவுடையோர் கருத்து. ஆகை யால் ஒவ்வொரு இந்து முஸ்லிம் சகோதரர்களும் மிருக வதையை நீக்கி, முனிசிபாலிடிகளிலும், தாலுகா, ஜில்லா, போர்டுகளிலும், பலதீர்மானங்கள், கொண்டு வருவதுடன், பல அரிய பிரசங்கங்களும், செய்து வதையைநீக்க முயற்சி யெடுப்பார்களானல், அதுவே நம் தாய் நாட்டிற்குப் பெரும் பாக்கியமாகும்.

# கருணாநிதி திருவசனம்

## தன்னுயிர்போல் மன்னுயிரையும் நினை.

மனமே! நீ அயலான் பொருளைத் திருட ஆசைப்படுகின்றனையே! உன் பொருளை ஒருவன் திருட நீ சம்மதிப்பாயா? பிறரை நிந்திக்க விரும்புகின்றனையே! உன்னை மற்றவர் நிந்திக்க விரும்புவாயா? மற்றவர்க்குத் தீங்கு செய்ய நினைக்கின்றனையே! வேறொருவர் உனக்குத் தீங்குசெய்யப் பிரியப்படுவாயா? அன்னியன் மனைவியைக் காதலிக்க விரும்புகின்றனையே! உன் மனைவியை ஒருவன் காதலிக்க நீ சம்மதிப்பாயா? (சம்மதிக்கமாட்டாய்.)

ஆகையால் நீ எதை நன்மையென்று விரும்புகிறாயோ! அதையே பிறருக்கும் செய்.—இதுவரையில் செய்யாதிருந்தாலும் இனிமேலாவதுசெய். எதைத் தீமையென்று விலக்குகிறாயோ! அதைப் பிறருக்குச்செய்யாதே. இதுவரை அப்படிச் செய்துவந்திருந்தாலும் இனிமேலாவது அவைகளை விட்டு விலகி நன்மையையே செய். இப்படி மற்றவர்கள் நடக்கிறார்களா? என்று ஒப்பிட்டுப் பாராதே. நீமாத்திரம் கட்டுப்பட்டு நடந்துகொள்ளப் பழகு.

மனமே! மேற்சொல்லியபடி நீ கட்டுப்பட்டு நடந்துகொள்ளவேண்டுமேயன்றி, மெய்ஞ்ஞானிகள் அப்படி நடக்கிறார்களா! என்று ஒப்பிட்டுப் பாராதே. ஏன்? சொப்பனத்தில் தனக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டதாகக் கனவு கண்டு, விழித்துப்பார்த்தவுடன் காயமொன்றுமில்லாமற் காண்பதுபோல் ஞானிகள் செய்கை. சொப்பனத்தில் ஒரு அழகிய மடந்தையுடன் காதலிக்கக் கனவுகண்டால், விந்து கலிதமாகிவிடுவதுபோல் அஞ்ஞானிகள் செய்கை. ஆகையால் இது விஷயத்தில் ஞானிகளை ஒப்பிட்டுப்பாராதே இப்படிச் செய்துபார். சீக்கிரம் நன்மையடைவாய்.

இதுபோன்ற நீதிகளை ஞானக் களஞ்சியத்தில் பார்க்கவும்.

நமது ஞானபூபதி அவர்களால்
எம்மதத்திற்கும் சம்மதமாக எழுதப்பெற்ற
விலைமதிக்கமுடியாத அட்சரலட்சமாகிய

**சமரச ஞான மாணிக்கங்கள்.**

எப்போது கிடைக்குமோ என்று வெகுகாலமாக
அன்பர்கள் கேட்டுக்கேட்டு எதிர்பார்த்த

# ஞானக்களஞ்சியம்

ஏராளமான புதிய படங்களுடன் வெளியாகிவிட்டது.

முதற்பதிப்பு பிரதிகளெல்லாம் உனக்கு எனக்கு என்று இந்துக்களும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் வாங்கிச் செலவாகிவிட்டன. இவ்விரண்டாம் பதிப்பில் ஏராள அப்பியாசங்களும் அநேக படங்களும் புதிதாகச் சேர்த்து முன்னிலும் பதின்மடங்கு வெகு சீர்திருத்தம் செய்யப்பெற்றிருக்கிறது.

தன்னையறியும் மஹா இரகசியமான ஆன்மஞானத்தை சற்குருவைப்போல் மிக்க வெளிப்படையாகப் போதிப்பதில் இந்நூலுக்கு நிகரான ஞான வசனநூல் இதுகாறும் வெளிவரவேயில்லை. வேதாந்த சித்தாந்த மேற்கோட் செய்யுட்களும், சந்தர்ப்பத்திற்கேற்ப இஸ்லாமிய வேதத்தின் பொன்போன்ற வசனங்களும் சரமாரியாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. இந்நூலை வாசிக்க கொடுத்துவைத்தவர்கள் வாஸ்தவத்தில் பாக்கியசாலிகளே. இந்நூலைத் தொட்டாலும் கைமணக்கும், சொன்னாலும் வாய்மணக்கும் என்பது சாலவும் பொருந்தும்.

**600** பக்கமுள்ள அழகான
சீர்மை காலிகோ பயிண்டு புத்தகம் ரூ. **3.**

| | | | |
|---|---|---|---|
| அன்பே கடவுள் | 0-12-0 | கந்தப்புகழ் | 0-2-0 |
| திருப்பாவணி | 0-2-0 | முருகப்புகழ் | 0-2-0 |
| தெய்வப்புகழ் | 0-2-0 | இலட்சுமி | 0-2-0 |
| முருகர் தியானம் | 0-2-0 | காவடிக்காட்சி | 0-1-0 |
| தெட்சணாமூர்த்தி பத்திரசக்கீதம் | | 1-ம் பாகம் | 0-1-0 |
| ஷை | | 2-ம் பாகம் | 0-1-0 |
| ஷை | | 3-ம் பாகம் | 0-1-0 |

M. A. நாவலர் அண்ட் சன்ஸ்,
விஜயபுரம்—தஞ்சாவூர் ஜில்லா.

திருவாரூர் — விஜயபுரத்திலிருந்து
சில ஆண்டுகளுக்கு முன் நடைபெற்று வந்த
சர்வ மத சமரசமான

# " ஞான சூரியன் "

---

இது சித்திரப்படங்களுடன் கூடிய
ஒரு நிகரில்லாத உயரிய மாதப் பத்திரிகை.

ஞானமென்றால் வேதாந்தமென்றும், அது சாமியார்களுக்கல்லவா வேண்டு? மென்றும் சிலர் ஆரம்பத்திலேயே நினைத்துவிடுகிறார்கள். ஞானமென்றால் அறிவு (Knowledge) என்று பொருள். அந்த அறிவை விளக்குவதே நமது ஞான சூரியன். இது இனிய செந்தமிழ் நடையில் மிக்க அழகாக எழுதப்பெற்ற வியாசங்களைத்தாங்கி, ஆண் பெண் இரு பாலருக்கும் படிக்கப் படிக்க நல்லறிவைவிளக்கி பரமானந்த மயமாய் ருசிக்கக்கூடியது. ஹிந்து, முஸ்லிம், முதலான சகல சமயத்தினரும் முன்னேற்றமும் சமரசமும் அடையும் பொது நலத்திற்காகவே கங்கணங்கட்டி உழைப்பது. இப்பத்திரிகையில் கல்வி, சுகாதாரம், கைத்தொழில், விவசாயம், அறிவைத் தரும் விகடம், பக்திமார்க்கம், ஞானமார்க்கம், சீர்திருத்தம், தேசியஞானம், சுயராச்யம், முஸ்லிம்நீதி, மாதர்நீதி, சிறுவர் நீதி, உலக வர்த்தமானம் முதலான ஏராள விஷயங்களைப் போதிப்பதுடன், நமது சந்ததியார்கள் - எதற்காகப் பிறந்தோம் என்பதையுணர்ந்து ஆன்மலாப சுயராச்சியம் அடைவதற்கு வேண்டிய வழிகளையும் அருமையாக போதிப்பது.

அநேக வேதாந்த நூற்களின் ஆசிரியர் ஞானபூபதி அவர்களால் டபிள் கிரவுன் 8 பேஜ் அளவில் பிரமாது க-வது சித்திரை மீ முதல் வெளிவந்துலாவும். பத்திரிகை அளவையும், பக்கங்களையும் முன்னிலும் அதிகப்படுத்தி பழைய சந்தா விகிதத்துக்கே அனுப்ப நிச்சயித்துள்ளனம்.

வருட சந்தா ரூ 1-8-0 வெளிதேசங்களுக்கு ரூ. 2.

"ஞான சூரியன்" ஆபீஸ்,
22, மூக்கர் நல்ல முத்து தெரு,
G. T. பிராட்வே, சென்னை.

நீங்கள் இதுவரையில் பார்த்திராத

# 47 யோகாசனப் படம்.

நோயற்ற வாழ்வு வேண்டுமானல்! தேக திடம் வேண்டுமானல்! இதிற் காட்டியபடி பயிலவேண்டும். தேகாப்பியாசிகள், யோகாப்பியாசிகளின் நன்மையை உத்தேசித்து, எவ்வளவோ சிரமப்பட்டு. வெகு அரும்பிரயாசையுடன் நமது ஞானபூபதிகள் அவர்களால் தயாரித்து பளபளப்பான சீர்மை ரியல் ஆர்ட் பேப்பரில், பார்த்தவர் கண்ணைக் கவரும்படியாக மூன்று கலரில் வெகு அழகாகப் பதிப்பித்தது விருத் தாப்பியர்கள்கூட இந்தப் படத்தைப்பார்த்து யோகாசனம் போடப் பழகிவிட்டார்கள். இந்த ஆசனம் போடுவதால் வியாதி நிவர்த்தியும், சுவாசப்பை விரிவும், இரத்த சுத்தியும், நரம்புகள் முறுக்கேறி தேகதிடமும் பிரத்தியட்சமாயுண்டாகிறது. கண்ணாடிபோட்டு வைத்துக் கொள்ளும் விதமாக 23 x 20 அளவில் தயாரிக்கப்பெற்ற பெரிய படம் ரூ. 1-0-0 சில படங்களே கைவசமிருக்கின்றன. முன் பணமனுப்பினல் எவ்வித செலவுமில்லாமல் ரிஜிஸ்தர்செய்து அனுப்புவோம்.

## அன்பே கடவுள்.

இந்நூலில்—தலையன்பு, இடையன்பு, கடையன்பு என்பவற்றின் விசேடங்களையும், அன்பின் பிரவாகத்தையும், அன்பும் கடவுளும் எப்படி ஒன்ருகும் என்பதையும், அன்பின் வல்லபத்தையும், அன்பில்லாவிட்டால் முத்தியடைய முடியாதென்பதையும் தக்க ஆதாரங்களுடன் கல்மனமும் கரைந்துருகி ஞான வீராவேசம் உண்டாகும் விதமாகக் கூறப்பெற்றுளது. விலை அணு 12.

## சருவமத சீவகாருண்ணியம்.

இந்நூலில் இஸ்லாமிய சீவகாருணியத்தின் மகிமையும், இராமலிங்க சீவகாருணியமும், புத்தர் சீவகாருணியமும் கூறப்பெற்றுளது. இந்து மதத்திலேதான் சீவகாருணியமிருக்கிறது, மற்ற மதங்களில் சீவகாருணியமில்லை என்று கூறும் ஆராய்ச்சியின்மைக்கு இஸ்லாமதத்தின் முழுநோக்கமும், என் அறுத்துப் புசிக்கிருர்கள் என்பதன் உண்மைத் தத்துவமும் விளக்கப்பெற்றிருக்கிறது. விலை அணு 6.

இந்நூலிற் கூறியபடி 48 நாள் அப்பியாசித்தால் போதும்

மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும்
அவசியம் வாசிக்கவேண்டிய

# வேதாந்த பாஸ்கரன்

(விளக்கமான இரண்டாம் பதிப்பு)

முதற்பதிப்பைப் பார்க்கிலும் இப்பதிப்பில் புதிதாக அநேக அரிய பெரிய விஷயங்கள் சேர்க்கப்பெற்று ஏராளமான படங்களுடன் அழகாகப் பதிப்பித்தது.

பரமரகசியம்! பரமரகசியம்!! என்று மகான்கள் வெளியிடாமல் மறைத்து வைத்திருந்த ஞானப் புதையல்களையெல்லாம் மிக்கவெளிப்படையாக விளக்கப்பெற்றிருக்கிறது. இப்பதிப்பில் இஸ்லாமிய வேதத்தின் மாணிக்கம் போன்ற வசனங்களும் ஏராளமாய் திருஷ்டாந்தத்திற்காக எடுத்தாளப் பெற்றிருக்கிறது. இந்நூலில் அனுவசியமான அடைமொழிகள் ஆசைக்குக் கூட காண்பதரிது. எல்லாம் உபதேசம்! எல்லாம் அப்பியாசம்! எல்லாம் யோகம்! எல்லாம் ஞானம்! இத்தகைய நூலை மேனாட்டில் வெளியிட்டிருந்தால் பவுன் மாரி பொழிந்து, எனக்கு! உனக்கு! என்று வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொள்வார்கள். நம்தமிழ் நாட்டில் சொற்ப விலையில் வெளிவந்துலாவுவதானது இந்திய மக்கள் செய்த பெரும்பாக்கியமேயாம். "ஒவ்வொரு அட்சரமும் ஒவ்வொரு இலட்சம் பொன்பெறும்" என்று கல்விமான்கள் புகழ்கிறார்கள்.

600 பக்கம் அநேக ஆப்டோன் படங்களுடன் கூடிய கண்ணைக் கவரும் காலிகோ பைண்டு விலை ரூபா 3

# அன்பே கடவுள்

அன்பு! அன்பு!! என்று பலபேர் பல விதமாகச் செய்து வருபவையெல்லாம் அன்பைச் சேர்ந்ததாகுமா? அன்பு செலுத்துவதென்பது எப்படி? எந்த விதமாக அன்பு செலுத்தினால் கடவுளைக்காண முடியும்? என்பது போன்ற எத்தனையோ விதமான திருஷ்டாந்தங்களுடன் எழுதப் பெற்றுள்ள சிறந்த புத்தகம்.

விலை அணு 12.

M.A நாவலர் அண்ட்சன்ஸ், விஜயபுரம்-தஞ்சாவூர் ஜில்லா.

குருவில்லாமல் நூலைப் பார்த்தே அப்பியாசிக்கக் கூடியதும், அநேக அப்பியாசப் படங்கள் அடங்கியதுமான

# ஞான யோக ரகசியம்

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்களில் சிலவற்றை மாதிரிக்காக இங்கு குறிப்பிடுகிறோம்

இராஜயோகம். மனோலயம் தேகாப்பியாசங்கள் பிராணாயாம யோகம், இதுவரையில் எந்த நூலிலும் வெளியிடாத பிராணாயாம யோகப்பிரிவு, எட்டு வகைப் பிராணாயாமம், அம்சகாயத்திரி. சோசப் பிரணவம், அப்பியாசம் செய்யுமிடம், அப்பியாசக்கணக்கு, அப்பியாச முறை, வமனம், (தௌதி) விசர்க்கம், (பஸ்தி) பிரமணம், நாசிபாவனம், குதக்கிரியை, உண்ணாக்கிரியை அப்பியாச காலம், அப்பியாசக்குறிகள், சண்முகி முத்திரை, மகா முத்திரை, சாலந்தர பந்தம். உட்டியான பந்தம், மூலபந்தம், விபரீதகரணி, சாம்பவி முத்திரை, இலாஞ்சனை, கேசரி முத்திரை, வஜ்ரோலி முத்திரை முதலான பதினாறு (சோடச) முத்திரைகள், (கரிசாலை நெய்,) மூல சுத்தி—(எரண்ட நெய்) கபமல நிவாரணம், பஞ்சகற்பம், மூதண்டக் கியாழம், தாம்பூலச் சுண்ணம், உப்புக் கட்டு, சூரிய யோகம், சந்திர யோகம், காயகற்பம், மும்மூல அகக் கற்பம், கற்பம் உண்பதற்கங்கம், கற்பமுண்ணுங்காலம், பேரண்டக் கற்பம் கற்பமுண்ணும்போது அபத்தியம் நேரிட்டு வியாதிகண்டால் இலகுவான வைத்தியமுறைகள், போசன நியமங்கள், யோக விக்கினங்கள். யோகப் பரீட்சை, சயனவிதி, கற்ப சாதனைக்கிரமம், அநேக புறக் கற்பங்கள், அயக்காந்த செந்தூரம் கருப்பு மூலிகைப் பயிர், கடுக்காய் கற்பம். காந்தக்கிண்ணம், பேய்த்தேற்றான் பாத்திரம், மிளகுகற்பம், தூதுவேளை கற்பம், நிந்திற்கற்பம். வேம்புக்கற்பம், கரிசாலை கற்பம், காரண்டக் கற்பம், கனை எருமைக்கற்பம், சர்க்கரைவேம்புக் கற்பம், செங்கற்றாழைக் கற்பம். கிளிமூக்கு மாங்காய் கற்பம், சாயாவிருட்ச கற்பம், கருங்கடலாடிக் கற்பம், காமஞ்சரிக்கற்பம், காயாசித்திபால் விருட்சங்கள், காயசித்தி மூலிகைகள், சுந்தரானந்தர் கேசரிகற்பம் முதலானவைகளும் கடல் மடை திறந்தாற்போல் கூறப்பெற்றிருக்கிறது. இந்நூலை வாசிக்கக்கொடுத்து வைக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்பாக்கியர்களே.

இந்நூலில் கூறியுள்ள அப்பியாசங்களைப்போல் வேறெந்த நூலிலும் சந்தேகமறக் கூறவேயில்லை. இந்நூலைப் பார்த்து அனேகம் பேர்கள் குருவில்லாமல் தானாகவே அப்பியாசம் செய்து மகானாகி விட்டார்கள். இந்நூலின் பெருமையை எழுதியோ! சொல்லியோ!! முடிந்தபாடில்லை.

சகலமதஸ்தர்களும் இதை வாசித்து ஆன்மலாபம் அடையலாம்.

சீர்மை முழு காலிகோ பைண்டு விலை ரூபா 3 0 0

**M.A.** நாவலர் அண்டு சன்ஸ், விஜயபுரம்-தஞ்சாவூர் ஜில்லா